யா/வண் நாவலர் மகா வித்தியாலயம்
யாழ்ப்பாணம்






# ஞானச்சுடர்

## மலர்

சித்திரை 1999








வெளியீடு
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குறள் வழி

" ஒல்லும் வகையான் அறவினை ஓவா
செல்லும் வாய் எல்லாஞ் செயல். [தே"

பொருள்:-

மனம், வாக்கு, காயம் மூன்றாலும் தர்மம் செய்வது மேலான செயலாகும்.

ஸ்ரீ

## அருணாசலசிவ அக்ஷர மணமாலை

### நூல்

66. பித்துவிட் டுனைநேர் பித்தனாக் கினையருள்
பித்தந் தெளிமருந் தருணாசலா (அ)

67. பீதியி லுனைச்சார் பீதியி லெனைச்சேர்
பீதியுன் றனக்கே னருணாசலா (அ)

68. புல்லறி வேதுரை நல்லறிவே துரை
புல்லிட வேயரு ளருணாசலா (அ)

69. பூமண மாமனம் பூரண மணங்கொளப்
பூரண மணமரு ளருணாசலா (அ)

70. பெயர்நினைத் திடவே பிடித்திழுத் தனையுன்
பெருமையா ரறிவா ரருணாசலா (அ)

தொடரும்......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்

வெளியீடு - 2 சுடர் - 16

1999 சித்திரை

## பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1) | சிவநெறி தழைத்தோங்குக | 1 - 8 |
| 2) | பக்தி மார்க்கம் | 9 - 10 |
| 3 | வேல் உண்டே துணை | 11 - 13 |
| 4) | நாலு யுகங்களிலும் வாழ்ந்த மனிதர்கள் பற்றிய வரலாறு | 14 - 16 |
| 5) | உலகெங்கும் விநாயக வழிபாடு | 17 - 18 |
| 6) | மானுடத்தை மேன்மைப்படுத்தும் மாண்புமிகு கோட்பாடுகள் | 19 - 22 |
| 7) | ஆண்டவன் படைப்பில் அனைவரும் சமம் | 23 - 25 |
| 8) | வாழ்க்கைத் துணை | - 26 |
| 9) | கோடும் எழுத்தும் | - 27 |
| 10) | வருடாந்த வள்ளுவர் விழா | 28 - 29 |
| 11) | சண்முகன் சரவணத்தின் பாங்கரில் வருதலாலே சரவணபவன் என்றானான் | 30 - 32 |
| 12) | சந்நிதியான் | 33 - 36. |
| 13) | வைகாசிப் பெருவிழா | 37 - 38 |
| 14) | பங்குனி உத்தரவிழா | 39 - 41 |



அன்பளிப்பு : மலர் ஒன்று 30/- ரூபா

வருட சந்தா தபால் செலவுடன் 385/- ரூபா.

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினர்.

அச்சுப் பதிப்பு : அச்சகம் - சந்நிதியான் ஆச்சிரமம்

தொண்டைமானாறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதியிரட்டை மணிமாலை

வெண்பா

ஏண்முகவே கண்டாவிறைத் தத்துவநூட் டேடிவினை
விஸ்மரகமார் சந்நிதிவாழ் வேற்கரனே - தண்மலர்நே
நன்விருதாட் பிர்பாடி புர்வ வெளிசேயவைப்
பண்விருகண் வைரற்றிறிது மார்.

கலித்துறை

பாருயர் குன்றலில் வானியரன் றந்தை பரிவனையோ
காருயர் குன்றா சன்மகன் சந்நிதி காவலபின்
ஏருயர் குன்றந் தடிந்தலை யக்குறக் கோதையிரு
போருயர் குன்றும் படிவதுன் பேரத்ர வழமையதே.

வெண்பா

ஏனிலையுங் கட்குறத்தி யின் மொழியோ சந்நிதியி
லேவிளையுங் கோல வெழில்முருகா - நாவிளையும்
புன்னெறியி னோன்றுயரம் போக்கத் திருவுளமே
முன்னைமற் செய்வ துரை

கலித்துறை

ஐயா கரத்திடை முட்டையன் றாற்கு மமர்க்களத்துப்
பையா வெனவத் தெதிர்த்தார்க்கு மேயருள் பாலித்தனை
மையா ருயர்பொழிற் சந்நிதி யாய்வினை வாழ்வுடையேம்
மெய்யா முனைநருள் மாந்தி விறக்கோ விளம்புதியே.

வெண்பா

விளம்புமறை கூட விளங்கெழி ராம
துளம்பொருமு சந்நிதியி லொன்றே - வளம்பரவு
மண்பரக மான வறுகுமணி மன்றெல்லா
மின்பகட மாடு மினிது.

கலித்துறை

இனியார் துணையென வேங்கி யழியா திருமனமே
கனியா திருக்குந் திணிமனக் கல்லுங் கனியவைத்து
நனியா தரத்தரு ளூட்டிடு மெத்தவி நாடியிலும்
பனியா ரணிச்சப் தொடைப்புயச் சந்நிதிப் பண்ணவனே.

ஆக்கம் : மணிப்புலவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'ஞானச்சுடர்'
## பங்குனி மாதவெளியீடு

**வெளியீட்டுரை:**

பங்குனி மலருக்கான வெளியீட்டுரையை சுவாமி சித்ரூபானந்தா அவர்கள் மேற்கொண்டார்கள். ஞானச்சுடர் மலரின் முதல் வெளியீட்டிற்கு வர விரும்பியும் வரமுடியாத சூழ்நிலை காணப்பட்டது ஆனால் இந்த மலர் வெளியீட்டிற்கு எதிர்பாராத விதமாக கலந்து கொண்டு இந்த வெளியீட்டுரையை வழங்க சந்தர்ப்பம் கிடைத்ததும் முருகப் பெருமானின் அருளே என்றும் குறிப்பிட்டார்.

**மதிப்பீட்டுரை:**

மேற்படி மலருக்கான மதிப்பீட்டுரையை யாழ்பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை முதுநிலை விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகம் அவர்கள் மேற்கொண்டார்கள். அவர் ஆரம்பத்தில் சந்நிதியைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். சந்நிதி என்று கூறும் பொழுது ஓர் உருவம் இல்லாது, ஓர் நாமம் இல்லாது, முருகப்பெருமான் தன்னுடைய அருளை எங்களுக்கு வழங்கிக் கொண்டிருப்பதை குறிப்பிட்டார்கள்.

ஒருவருக்கு உடல் வாழ்க்கை, உளவாழ்க்கை, ஆன்மீக வாழ்க்கை, ஆகிய மூன்றும் நன்றாக அமைய வேண்டும் இத்தகைய மூன்று நிலைகளிலும் ஒருவர் மேம்பாடு அடைய ஞானச்சுடர் உதவியாக அமைகின்றது. எனவும் குறிப்பிட்டார்.

அறம் என்பது விரிவுபட்ட கருத்தைக் கொண்டது. உதாரணமாக சொல்லும் அறம், செயலும் அறம் என்றும் கூறலாம். அவை உண்மையாக இருக்கும் பொழுது அவற்றையும் அறம் என்றே கூறுகின்றோம். அருள் விளைச்சல் நடைபெறும். பூரிபாகிய சந்நிதியில் இவ்வாறான ஒரு ஆத்மீக சஞ்சிகை வெளியிடும் ஒரு அறச்செயலாகவே உள்ளது. என்றும் திருமதி நாச்சியார் அவர்கள் குறிப்பிட்டார்கள். இறுதியாக சுடரின் உள்ளடக்கத்தைப் பற்றியும் சுருக்கமாக மதிப்பீடு செய்து தனது உரையை நிறைவு செய்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரை மாத சிறப்புப் பிரதி பெறுவோர்

திரு. த. கணேசமூர்த்தி
( இலங்கை வங்கி யாழ்ப்பாணம் )

திரு. இ. செந்தில்நாதன்
( இலங்கைவங்கி மானிப்பாய் )

திரு. ப. ஆனந்தநடேசன்
( இலங்கைவங்கி பருத்தித்துறை

திரு. S நவரட்ணராசா
( இலங்கைவங்கி நெல்லியடி )

திரு. ஆ. சுந்தரலிங்கம்
( பிரதி அஞ்சல்மா அதிபர் அலுவலகம் யாழ்ப்பாணம் )

திருமதி யோ கந்தசாமி
( மயிலாத்தோட்டம் - கரணவாய் தெற்கு )

ந. சேகர்
( கிராமசேவையாளர் வீரபத்திர கோவிலடி, உடுப்பிட்டி )

கலைமகள் சனசமூக நிலையம்
( வல்வை றோட் தொண்டைமானாறு )

திரு க பரராஜ விருந்தம்
( காவில் - கரணவாய் தெற்கு )

திருமதி த தங்கராசா
( வீரபத்திர கோவிலடி கதிரிப்பாய் )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யா/வண் நாவலர் மகா வித்தியாலயம்
யாழ்ப்பாணம்

# சிவநெறி தழைத்தோங்குக!



இறைவன் என்ற சொல் 'இறு' என்ற பகுதியடியாகப் பிறந்தது. எல்லா உயிர்களிலும் எல்லாப் பொருள்களிலும் இறைவன் நீக்கமற நிறைந்து நிற்கின்றான். இனி, எல்லாம் அவனிடத்திலே இருக்க, அவன் அவைகட்கு உறைவிடமாக இருக்கின்றான், இது இறைவனுடைய விசுவரூபம்.

எல்லாப் பொருள்களிலும் தங்க வேண்டுமாதலால் சிறிய - மிகச் சிறிய பொருளாக இருக்கின்றான். மேருகிரி முதலிய பொருள்கள் யாவும் அவனிடத்திலே தங்கும்படி அப்பெருமான் மிகப் பெரிய பொருளாகவும் விளங்குகின்றான்.

அணுவுக்கு அணுவாகவும், மகத்துக்கு மகத்தாகவும் விளங்குபவன் இறைவன். ஒரு பழங்கதை.

திருக்கயிலாய மலையில் உமாதேவியாருடன் சிவபெருமான் வீற்றிருக்கின்றார். விநாயகப்பெருமானும் முருகப்பெருமானும் தாய் தந்தையரை வணங்கி வழிபடும் பொருட்டுச் சென்றார்கள்.

தினந்தோறும் பழங்காலத்தில் மைந்தர்கள் தந்தை தாயரை வழிபடுகின்ற வழக்கம் இருந்தது.

"வைகறை யாமம் துயில் எழுந்து தான் செய்யும்
நல்லறமும் ஒள்பொருளும் சிந்தித்து வாய்வதில்
தந்தையும் தாயும் தொழுது எழுக என்பதே
முந்தையோர் கண்ட முறை"

என்று ஆசாரக்கோவை கூறுகின்றது.

ஆனைமுகனும் ஆறுமுகனும் அம்மையப்பரை வலம் வந்து வணங்கினார்கள். சிவமூர்த்தியின் திருக்கரத்தில் ஒரு தெய்வ மாதுளங்கனி இருந்தது. அதனை இருவரும் கேட்டார்கள்.

வானம் ஆண்டவன் புகழைக் குறிக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரனார் "அகில உலகங்களையும் ஒரு நொடிப் பொழுதுக்குள் வலம் வருபவருக்கு இக்கனி தரப்படும்" என்று அருளிச் செய்தார்.

முருகப்பெருமான் மயிலின் மீது அகில உலகங்களையும் ஒரு நொடிப் பொழுதுக்குள் வலம் வந்தார்.

"ஆகரம் விளைத்தகில லோகமும் நொடிப்பளவில்
ஆசையொடு சுற்றுமதி வேகக்காரனும்
இவரியகனி கடலைபய றொடியல் பொரி அமுதுசெயும்
இலகுவெகு கடவிகட தடபார மேருவுடன்
இகலிமுது திகிரிகிரி நெரியவளை கடல் கதற
எழுபுவியை ஒருநொடியில் வலமா ஓடிவரும்"

— திருப்புகழ்

"எல்லாம் சிவத்துக்குள் ஒடுக்கம்" என்று கூறிய சீரிய மதியால் சிந்தித்து, ஆனைமுக அண்ணல் அம்மையப்பரை வலமாக வந்து கனி பெற்றார்.

இந்தப் பழங்கதை ஒரு பெரிய தத்துவத்தை உணர்த்துகின்றது.

1. தந்தைக்கு உபதேசித்த தயாபரனுக்குச் சிவத்துக்குள் எல்லாம் ஒடுக்கம் என்பது தெரியாதா? தெரியும்.

2. எல்லா உலகங்களையும் சர்வவல்லமையுடைய வல்லபை விநாயகரால் வலம் வர இயலாதா? இயலும்.

3. சிவபெருமான் இருமைந்தர்களும் கனிகேட்ட போது, உள்ள கனியை உடைத்துப் பகிர்ந்து தரக்கூடாதா?

4. அல்லது மற்ற ஒரு கனியை உண்டாக்கித் தரக்கூடாதா? வீதியில் விளையாடுகின்றவன்கூட ஏதேதோ பொருள்களைத் தருவிக்கின்றானே!

5. "தம்பிக்கே தந்து விடுங்கள். எனக்கு வேண்டாம்" என்று விட்டுக்கொடுக்கின்ற குணம் விநாயகரிடம் இல்லையா?

6. "அப்பா! அண்ணாவுக்கே கொடுங்கள், நான் பிறகு வாங்கிக் கொள்ளுவேன்" என்று ஒதுங்கிப்போகின்ற தியாக உணர்வு வேலவன்பால் இல்லையா?

7. ஒரு சிறிய கனி காரணமாக உலகத்தை வலம் வந்தால் கூலி கட்டுமா?

★ ஆனந்தம் அளிப்பதே கல்வியின் இலட்சியமாகும். ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. பழம் காரணமாகத் திருக்கயிலாய மலையில் முருகனும் விநாயகரும் போட்டியிடலாமா?

9. பழத்தின் மீது ஞானமே வடிவான விநாயகருக்கும் ஞான பண்டிதனுக்கும் அத்தனை ஆசையா?

என்ற வினாக்கள் அடுக்கடுக்காக எழுகின்றன. இத்தகைய வினாக்களும் தவிடுபொடியாகுமாறு விடை பகர்கின்றேன்.



இறைவனைப் பற்றி நாம் முன் என்ன சிந்தித்தோம்? "எல்லா இடங்களிலும் எல்லாப் பொருள்களிலும் அவன் தங்கி இருக்கின்றான்; அவனிடம் எல்லாம் தங்கியிருக்கின்றன" என்று இருவிதமாக நினைத்தோம் அல்லவா?

சிவத்துக்குள்ளே எல்லாவற்றையும் பார்த்தார் கணபதி; எல்லாவற்றுக்குள்ளும் சிவத்தைப் பார்த்தார் கந்தன்.

இந்த அரிய பெரிய உண்மையை உணர்த்துகின்றது அப்பழங்கதை.

இதனைத் தாயுமானவர் கூறுகின்றார்;

"அங்கிங் கெனாதபடி எங்கும் பிரகாசமாய்
ஆனந்த பூர்த்தி யாகி
அருளொடு நிறைந்ததெது? தன்னருள் வெளிக்குளே
அகிலாண்ட கோடி எல்லாம்
தங்கும் படிக்கிச்சை வைத்துயிர்க் குயிராய்த்
தழைத்த தெது?"

இறைவன் எங்கும் நீக்கமற நிறைந்திருக்கின்றானே, உலக மாயை அவனைப் பற்றாதோ என்ற வினா எழும்.

உப்பு விளைகின்ற இடம், கடல். கடலில் உயிர் நீரில் பிறந்து, உவர் நீரைப்பருகி, உவர் வாழ்கின்ற மீனுக்கு உவர் ஏதுமில்லை. மீன்

ஞானியின் உள்ளத்தில் இன்பமும் துன்பமும் ஒட்டுவதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்போர் கடல் மீனுக்கும் உப்பிட்டுத்தான் சமைத்து உண்பார்கள். அது போல இறைவன் யாவுடனும் உறைகிறான் உலக மாயை அவனைப் பற்றாதென உணர்க.

எங்கும் நிறைந்த பொருள் இறைவன் என்றால் ஏன் அது நமது கண்ணுக்குத் தெரியவில்லை என்பாரும் உளர். விறகிலே நெருப்பு இருக்கின்றது; பாலில் நெய் இருக்கின்றது. ஆனால், கண்ணுக்குத் தெரிகின்றனவா? இல்லை; விறகிலே தீயும், பாலில் நெய்யும், கண்ணுக்குத் தெரியாமையால் இல்லையென்றால் நமக்கு அறிவு இல்லை என்று உலகம் சிரிக்காதோ?

விறகைக் கடைந்தால் தீ வெளிப்படும்; பாலைக் கடைந்தால் நெய் வெளிப்படும் அது போல், தியானம் புரிந்தால் இறைவன் வெளிப்பட்டுக் காட்சி தருவான். சாதனைகள் செய்தால் தேவரும் மூவரும் காணமாட்டாத சிவம் - தானே வந்து வெளிப்பட்டுத் தோன்றும்.

“விட்டேன் உலகம், விரும்பேன் இருவினை, வீணருடன்
இட்டேன் அவருரை கேட்டுமிரேன். மெய்கெடாதநிலை
தொட்டேன், சுகதுக்கம் அற்றுவிட்டேன் தொல்லை நான்மறைக்கும்
எட்டேன் எனும்பரம் என்னிடத்தே வந்துஇங் கெய்தியதே!

என்கிறார் பட்டினத்தடிகளார்.

கற்றவர் விரும்பும் கற்பகக் கனியும், மற்றவர் அறியாத மாணிக்க மணியும் ஆகிய இறைவன் சொரூப நிலையில் “சிவம்” என்றும், உலகை நோக்கிய தடஸ்த நிலையில் “பதி” யென்றும் பேர் பெறுகின்றான்.

இறைவனைப் பற்றியும், உயிர்களின் தன்மைகளைப் பற்றியும், உயிரின் இயற்கைக் குற்றமாகிய ஆணவத்தைப் பற்றியும் நமது சைவ சித்தாந்த நூல்கள் தெளிவாகக் கூறுகின்றன. ஏனைய நூல்களில் ஆணவத்தின் பேர்தானும் கூறுமாறில்லை.

அத்வைதம்: அத்வைதம் என்ற சொல்லுக்குப் பலர் பலவாறு பொருள் கண்டார்கள். திருவருள் துணை செய்யாமையால் மற்ற மதாசிரியர்கள் மாறுபட்ட கருத்துக்களைக் கூறிக் குழப்பஞ் செய்தார்கள்.

“ஏகம் ஏவ அத்விதீயம் ப்ரம்ம” என்பது வேத வாக்கு. இதன் பொருள் “ஒன்றேதான் பொருள்; இரண்டாவதில்லை” என்பது. இதை வைத்துக் கொண்டு சங்கரர் முதலியோர், பிரமத்தையன்றி வேறு பொருள் இல்லையென்று முடிவு கட்டிவிட்டார்கள்.

★ தினமும் ஜபம் செய்பவர்களிடம் பாவம் இருக்காது. ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரமத்தைத் தவிர வேறு பொருளே இல்லையானால், இதனை யார் யாருக்குக் கூறுவது? இந்த வார்த்தையினால்,

சொல்பவன் ஒருவன், கேட்பவன் ஒருவன் இருக்க வேண்டும் அன்றோ? பிரம்மமே மயங்குகின்றதா? பிரமத்தைத் தவிர வேறு பொருள் இருந்தால்தானே இந்த வசனம் உண்டாகும்?

பிரம்மத்தை தவிர தலைமைப் பொருள் வேறு இல்லையென்பதே இந்த வேத வசனத்தின் உட்பொருள் என உணர்க. இங்ஙனம் அறியாது மயங்கி மருண்டார்கள் பலர்!

ந + த்வைதம் என்ற சொற்கள் சேர்ந்து அத்வைதம் என்றாயிற்று. ந என்ற சொல்லுக்கு ''சப்த கல்பத்ருமம்'' என்ற நூலில் ஆறு பொருள்கள் கூறப்பட்டுள்ளன. அவற்றுள் மூன்று அன்மை, இன்மை, மறுதலை என்பனவாம். இன்மையென்ற பொருளில் அப்பிரகாசம் எனக்கொண்டு ஒன்றேதான் என்றார் சங்கரர். மறுதலைப் பொருளில் அநீதி, அதர்மம் எனக்கொண்டு இருபொருள்கள் என்றார் மத்வர். மெய்கண்டார் அப்பிராமணன், பிராம்மண தருமம் கெட்டவன் என்று அன்மைப் பொருளில் கூறியருளினார். பொன்னும் அணியும் போல உலகமும் இறைவனும் ஒன்றே என அபேதவாதம் கூறினார் சங்கரர். இதில் ஆபரணத்திற்கு வரும் குறைபாடுகள் யாவும் பொன்னுக்கும் வரும்.

ஆதலால், இவை பொருந்தாதென உணர்க.

இறைவனும் உலகமும், ஒளியும் இருளும் போல வேறு வேறு என்றனர் மத்வர். இது பேதவாதம். இருளும் ஒளியும் பகைப்பொருள் கள். ஆதலால் உலகமும் இறைவனும் தொடர்பில்லாமல் போவதால் இது பொருந்தாமையறிக.

பஞ்சராத்திரிகள், சொல்லும் பொருளும் போல் பேதபேதம் என்பர். சொல்லும் பொருளும் வேறுவேறு பொருளாயாதலால் இவர் கூற்றும் பொருந்துமாறில்லை.

சிவாத்துவித சைவர்களும், மரமும் கிளையும் போல என பேதா பேதமே கூறி மயங்குவர். அபேதவாதம், பேதவாதம், பேதாபேதவாதம் என்ற மூன்றுமே பொருந்தா என்றால், உலகத்துக்கும் இறைவனுக்கும் உள்ள தொடர்பு தான் எவ்வகைப்பட்டது?

மேலே கூறிய மூன்றினுள் ஒன்றையே கூறாது, மூன்று தன்மை மைகளும் தன்னுட் காணப்படும் அத்வைதத் தொடர்பே உலகிற்கும்

★ கலங்காத மனமே அரும் பெரும் காரியங்களைச் செய்யவல்லது. ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனுக்கும் உள்ள தொடர்பு என்கிறார் மெய்கண்டதேவர். என்னும் பொருளில் அகரம் அன்மைப் பொருளிலேயே வரும்.

அ + ஏகம், அநேகம் என்பது போல, அ + த்வைதம் அத்வைதம் என வந்தது.

அத்வைதம் என்பது இரண்டல்லாமை, பிரிவின்மை என உணர்க. பிரிவின்மை என்றதனால் பொருள் இரண்டுதான். இரண்டாயினும் வேறு வேறாய் நில்லாது ஒன்றியே நிற்கும்.

இறைவனும் உலகமும் ஒன்றி நிற்குங்கலப்பினால் ஒன்றாகியும் பொருள் தன்மையால் வேறாகியும், உலகத்துக்கு உதவும் பொருட்டு உடனாகியும், இறைவன் ஒன்றாகி, வேறாகி, உடனாகி நிற்கின்றான்.

> " உடலும் உயிரும் போல் ஒன்றாகியும்
> கண்ணொளியும் கதிரொளியும் போல் வேறாகியும்
> கண்ணொளியும் உயிரறிவும் போல் உடனாகியும்
> ஒன்றுபட்டு அருள் புரிவன்.

இந்த விரிந்த கருத்துக்களை மெய்கண்டார் சுருங்கிய சொற்களால் " அவையே தானேயாய் " என்று கூறியுணர்த்துகின்றார்.

> அவையேயாய் - உயிரும் உடலும் போல் ஒன்றாகியும்
> தானேயாய் - பொருள் தன்மையால்
> கண்ணொளியும் கதிரொளியும் போல் வேறாகியும்
> அவையே தானேயாய் - கண்ணொளியும்
> ஆன்ம அறிவும் போல் உடனாகியும்

நின்று இறைவன் அருள் புரிகின்றான்.

> " ஈறாய் முதல் ஒன்றாய் இருபெண் ஆண் குணம் மூன்றாய்
> மாறாமறைநான்காய் வருபூதம் அவை ஐந்தாய்
> ஆறார் சுவைஏழோசையொடு எட்டுத் திசைதானாய்
> வேறாய் உடன் ஆனான் இடம்வீழிம் மிழலையே "

என்று திருஞானசம்பந்தர் இதனை விளக்குகின்றார்.

எனவே உயிர்களை உய்விக்கும் பொருட்டு இறைவன் ஒன்றாய் வேறாய் உடனாய் நிற்கின்றான்.

இறைவனுடைய அருட்பெருங் கருணையை நினைந்து நினைந்து நாம் உருகி வழிபாடு செய்தல் வேண்டும். இல்லையேல் நன்றி மறந்த பாவத்துக்கு ஆளாவோம்.

---

★ அழைப்பின்றி (அனுமதி) இல்லாமல் பிறர் விவகாரத்தில் தலையிடக்கூடாது. ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனுடைய திருவைந்தெழுத்தை இடைவிடாது ஓதினால் பிறவிப் பெருங்கடலை எளிதில் கடந்து விடலாம்.

சித்தத்தில் சித்திக்கும் மந்திரம் பஞ்சாட்சரம். சித்திக்கும் முத்திக்கும் அதுவே காரணம்.

" ஒன்று கண்டீர் உலகுக்கு ஒரு தெய்வமும்
ஒன்று கண்டீர் உலகுக் குயிராவது
நன்று கண்டீர் இனிநமச் சிவாயப்பழம்
இன்றுகண் டேற்கிது தித்தித் தவாறே "

- திருமந்திரம்

சிவபஞ்சாட்சரத்தை அன்புடன் ஓதும் உத்தமர்க்குத் தரித்திரம் உண்டாகாது. இம்மை, மறுமை, வீடு மும்மை நலங்களும் உண்டாகும்.

ஆயிரம் எழுத்தல்ல, நூறு எழுத்தல்ல, பத்தெழுத்தல்ல, ஐந்து எழுத்துதானே இதைக்கூட உச்சரிக்கக்கூடாதா என்கிறார் இராமலிங்க அடிகளார்.

" ஆயிர மன்றே நூறுமன்றே சனர்த்தன்றே
ஆயிரப்பேர் எந்தையெழுத் தைந்தே காண் - நீயிரவும்
எல்லும் நினைத்திடவே ஏத்துகின்றேம் எந்தாய்நின்
செல்லுமலம் என்செய்கேன் செப்பு "

நமக்கு இறைவன் தந்த வாழ்நாள் சிலவே. ஒவ்வொரு நாளாகக் கழிந்து கொண்டே போகின்றது. நாம் அன்றாடம் தேதித்தாள் கிழிக் கின்றோமே? தாளா அது? இல்லை, நம் வாழ்நாள். பொழுது விடிந்து பொழுது போனால் வாழ்நாளில் ஒருநாள் வீணாகி விடுகின்றது. ஒரு நாளைக்குத் தேதித்தாளை நாம் கிழிக்கமாட்டோம். மனைவி, "தினம் காலண்டரைக் கிழித்துப் பற்பொடி மடிப்பீரே! இன்று கிழிக்கவில்லையே!" என்று கூறியழுவாள்.

ஆறு நாளில் கண்ணப்பர் முத்தி பெற்றார் என்று அறிகின்றோம். தீவிரமாக இறைவனிடத்தில் அன்பு செலுத்தினால் கண்ணப்பர் பெற்ற பேற்றை நாமும் பெறலாம்.

திருச்சிராப்பள்ளிக்கு அருகில் யானை பூசித்த தலம் திருவானைக் காவும், எறும்பு பூசித்த தலம் திருஎறும்பூரும் காட்சி தருகின்றன. பெரிய பிராணி யானை; சிறிய பிராணி எறும்பு; 'எறும்பு முதல் யானை ஈறாக' என்பார்கள். யானையும் இறைவனை வழிபட்டது. மனிதராகப் பிறந்த நாம் இறைவனை வழிபட வேண்டாமா?

★ தைரியம் போனால் எல்லாமே போய் விடுகிறது. ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ? ஆகலால், ஒவ்வொருவரும் சிவபூசை செய்தல் வேண்டும். திருமுறைகளை ஓதுதல் வேண்டும். திருவெண்ணீறணிந்து, கண்டிகை புனைந்து, ஆலய வழிபாடு செய்தல் வேண்டும். இறைவனிடத்தில் இடையறாத அன்பு செய்ய வேண்டும். மால் என்றால் அன்பு. மால் ஆனார்க்கு அவன் எளியவன். அன்பு செய்வார் நெஞ்சில் நீங்காது நிற்பான்.

" அன்றுமா லயனார்க் கரிதாகி நீறுவகில்
இன்றுமா லனைக் கெளிதல்லோ கொன்றைசேர்
பொன்னஞ் சடாமகுடப் புண்ணியா பொற்சபையில்
மன்னா சிதம்பர தேவா "

" நாலைவரு மாலும் சதுர்முகனும் மற்றுமுள்ள
வானவரும் தேடி மயங்கவே — ஞானமுடன்
நேயம் பெறுமடியார் நெஞ்சினுள்ளே நிற்பதென்ன
மாயம் சிதம்பரதே வா "

என்கின்றார் குருநமசிவாயர்.

எனவே, என்புருக அன்பு சொரிந்து, எல்லோரும் பாச நீக்கம் பெற்று சிவமாம் பேற்றி பெறல் வேண்டும்.

இதுகாறும் கூறியவற்றால், இறைவன் எங்கும் உளன் என்பதும், முருகனும் கணபதியும் சிவனது அத்துவித நிலையைக் காட்டுவார்கள் என்பதும், இறைவன் உலகமெங்கும் உறைபினும் கடல் மீன்போல் உலக மாயை ஒட்டாதவன் என்பதும், தியானத்தால் அவனைக் காணலாம் என்பதும், அத்வைதம் என்ற சொல்லின் உண்மைப் பொருள் இது என்பதும், இறைவன் ஒன்றாய் வேறாய் உடனாய் நின்று தன்னருள் புரிகின்றான் என்பதும், அப்பரமனை வழிபட்டு ஒவ்வொருவரும் உய்தல் வேண்டும் என்பதும் பற்றிச் சிந்தித்தோமாக.

தொகுப்பு: சந்நிதியான் ஆச்சிரமம்

தண்ணீரை, சிலர் 'ஜலம்' என்றும், சிலர் 'வாரி' என்றும், சிலர் 'வாட்டர்' என்றும், சிலர் 'பானி' என்றும் வேறு வேறு வார்த்தைகளால் அழைக்கின்றனர். அதுபோல ஒரே சச்சிதானந்தப் பொருளை, சிலர் கடவுளென்றும், சிலர் அல்லா என்றும், சிலர் ஹரி என்றும், சிலர் பிரம்மம் என்று வேறு வேறு பெயர் இட்டு அழைக்கின்றனர். — பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர்.

வரவு போக்கொழிய வழி அடைக்காதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பக்தி மார்க்கம்

மனிதன் படும் துன்பதுயரங்களுக்குக் காரணம் ஈஸ்வரனிடம் உண்மை விசுவாசம் இல்லாததுதான். இறை நம்பிக்கையை நாம் வளர்ப்பதற்குப் பக்தி அவசியம். எமது பக்தி வளரவளரத்தான் ஈஸ்வர ஞானமும் அதிகரிக்கும்.

எனவே, பக்தி வளரவேண்டுமானால் எம்மை அறியாமல் எமது மனமானது பரமாத்மாவிடம் போய்க் கலந்து நிற்கின்ற நிலை வேண்டும். ஒரு சிறிது நேரங்கூட அவனை மறந்தால் சாந்தியில்லாது அலையும் பயமான நிலைதான் வந்து சேரும்.

எனவே, இறைவனை என்றும் மறவாது இருப்பவனுக்கே இறை ஞானம் உண்டாகும்.

இறைஞானம் ஏற்பட்டால் தான் நான், எனது என்ற மனோ நிலை மாறி நாம் சமூகத்தில் உத்தமர்களாக வாழ இயலும். எமது இஷ்ட தெய்வத்தோடு பூரண பக்தியுடன் இருந்தாலும் மற்றைத் தெய்வங்களையும் புறக்கணிக்காது அவர்களையும் கௌரவ நிலையில் ஏற்றிப் போற்றுதல் வேண்டும். ஏனெனில் தெய்வங்கள் அனைத்தும் ஒரே சக்தியையும் அன்பையுமே தெரிவித்து நிற்கின்றன.

நாம் எத்தொழிலில் புரிந்தாலும், எச்சமயத்தைத் தழுவியிருந்தாலும் சமூகத்தில் எந்நிலையிலிருந்தாலும் கள்ளம் கபடமற்றுச் சத்தியத்துடன் வாழ்வதே எம்மை ஆன்ம ஈடேற்றத்துக்கு இட்டுச் செல்லும். இன்றைய காலகட்டத்தில் பணம் பணம் என்று பலர் அலைந்து திரிவதைப் பார்க்கிறோம். பணம் நமக்கு உணவும், உடையும், இருக்க இடமும் தரலாம். ஆனால், பணமே எமது வாழ்க்கையின் இலட்சியமாக இருக்கலாகாது. பணத்தின் உதவியால் நாம் இறை தரிசனம் பெற இயலுமா?

அநித்தியமான இவ்வுலக பாச பந்தங்கள் தோன்றி மறைவதை உணரும் போது எமக்கு அவற்றினிடத்து ஆசையும், விருப்பமும் ஏற்படா. இதுவே இறைஞானத்தைப் பெறுவதற்கான அறிகுறி. வண்ணத்துப் பூச்சி எப்படித்தான் கட்டுகிற கூண்டுக்குள்ளேயே சிக்கிக் கொள்கிறதோ அது போலவே நாமும் உலகப்பற்றோடுள்ள ஆசை வலைகளிற் சிக்கித் தவிக்கிறோம்.

★ அமைதியில்லாத மனமே நோய்க்கு காரணமாகும். ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவேகமாக, வைராக்கியமான மனத்தோடு இயங்கும்போதுதான் நாம் ஆன்ம ஈடேற்றம் பெற இயலும். இதற்காகவே பிரபந்த பாராயணமும், நாயன்மாருடைய திருமுறைப் பாராயணங்களும் எமது ஆலயங்களிலே நடாத்தப்படுவது மிக அவசியம். அவை வெறுமனே நேரஞ்செல்லும்படி செய்வதாகப் பலர் தவறாக எண்ணுகிறார்கள். ஆகவே தான், அவற்றை எமது ஆலயங்களில் ஓதுபவர்கள் அவற்றின் தன்மைகளையும் பெருமைகளையும் பாமர மக்களும் விளங்கிக் கொள்ளக் கூடிய வகையில் எடுத்தியம்ப வேண்டும். இல்லாவிடில், இவ்வகையான புராணப் படிப்புகள் அர்த்தமற்றவையாகி விடும்.

எனவே தான், சமய மார்க்கத்தைக் கடைப்பிடிக்கும் நாம் சைவ சமயத் தத்துவங்கள் எங்கெங்கு பேசப்படுகின்றனவோ அங்கங்கு சென்று பணிவடக்கத்தோடு இறை சிந்தனையோடிருந்து அவற்றைக் கேட்டறிய வேண்டும். அவ்வாற்றானே நாம் ஆண்டவன் தரிசனம் பெற இயலும்.

பெரிய முனிவர்கள், மகரிஷிகள், அருள் வாக்கு உள்ளவர்கள் எல்லோரும் கடும் தவ வலிமையினால் ஆண்டவனை வெவ்வேறாக ஆவாஹனம் பண்ணி உலகத்திலுள்ள ஜீவராசிகள் எல்லாம் உண்மையைத் தரிசித்து முக்தி நிவிர்த்தி பெறச் செய்வாய் என்று பிரார்த்தித்து வெவ்வேறு தலங்களிலும், தீர்த்தங்களிலும் விட்டுச் சென்றுள்ளனர். அதனால்தான் அவ்வத் தலங்களிலும் தீர்த்தங்களிலும் ஒரு தனிவிசேடம் இன்றும் உண்டு. இந்த மனோபாவமே சைவசமயத்தின் சிறப்பம்சமாகும். சகல மக்களும் ஷேமமாக இருக்க வேண்டி நாம் எப்போதும் பிரார்த்தித்து வந்தால் சகலரும் பாவநிவிர்த்தி பெற்றுச் ஷேமமாக வாழ்வார்கள் என்பதில் எதுவித ஐயமுமில்லை.

" லோகா சமஸ்தா சுகினோ பவந்து "

இ. விஜயரத்தினம்
( நயினை விஜயன் )

அன்பு நிலவாத வீடு ஆத்மா இல்லாத உடல் போன்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேல் உண்டே துணை

மொழியின் மறைமுதலே முன்னயனத் தேவே
அறிய வருபொருளே கண்ணே – நெறிய
கலையனே எங்கள் கணபதியே நின்னை
அலையாது அருளோதென் அன்பு.



காவிரிப்பூம் பட்டினத்துச் சைவ வணிகர் குலத்தில் பட்டினத்துப் பிள்ளையார் தோன்றினார். இவருடைய வளர்ப்பு மகனாகிய மருதவாணர் எழுதிவைத்த "காதற்ற ஊசியும் வாராது காணும் கடைவழிக்கே" என்ற வரிகள் இவருக்கு ஞானத்தை ஏற்படுத்தியது. காவிரிப்பூம் பட்டினத்துப் பெரியவராயிருந்த இவரை எல்லோரும் பட்டினத்துப்பிள்ளையார் என அன்போடு அழைத்தார்கள். பல தலங்களையும் வணங்கிக்கொண்டு துறவியாய் வாழ்ந்த இவர் சிறந்த பக்திப் பிரபந்தங்களைப் பாடினார். இவர் பாடிய பிரபந்தங்கள் ஐந்து ஆகும். [1] கோயில் நான் மணிமாலை [2] திருக்கழுமல மும்மணிக்கோவை [3] திருவிடை மருதூர் மும்மணிக்கோவை [4] திருவேகம்பமுடையார் திருவந்தாதி [5] திருவொற்றியூர் ஒருபா ஒருபஃது என்பன அவை ஆகும். இவரின் பாடல்களில் வடமொழிக்கலப்பு தாராளமாக உள்ளது. புறக்கிரியைகளிலும் பார்க்க இறைவனிடத்தில் நாம் செலுத்துகின்ற உள்ளன்பே முக்கியம் என்பார். "பக்தியுடையார் பச்சிலையிடினும் முத்தி கொடுக்க முன்னின்றருளும்" என்றும் "போதும் பெறாவிடிற் பச்சிலை உண்டு புனல் உண்டு எங்கும் ஏதும் பெறாவிடில் நெஞ்சுண்டு அன்றே" என்றும் உள்ளம் உருக இறைவனைப் பாடுவார். இலக்கியச் சுவையிலும் பக்திப்பெருக்கிலும் சமய நுணுக்கத்திலும் இவர் பாடல்கள் சிறப்பாக அமைந்திருந்தன.

புறச் சிவ சின்னங்களாகிய திருநீறு, உருத்திராக்கமும் அகச் சிவ சின்னமாகிய திருவைந்தெழுத்து மந்திரமும் முத்திக்குரிய சாதனங்களாகும். இதனைப் பட்டினத்தடிகளின் பின்வரும் பாடல் தெளிவாக விளக்குகின்றது.

★ தெரிந்தவற்றை எல்லாம் பேசாதே. ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணீர் கழியொன்றும் கல்லீர் எழுத்தஞ்சும் வல்ல வண்ணம்
பேணீர் திருப்பணி பேசீர் அவன் புகழ் ஆசைப்பட்டுப்
பூணீர் உருத்திர சாதனம் நீறெங்கும் பூசுகிலீர்
வீணீர் எளிதோ மருதப்பிரான்கழல் மேவுதற்கே.

சிதம்பரத்து நடராஜப் பெருமான் தில்லையிலும் அடியார் மனத்திலும் திருநடனம் புரிவார் என்கிறார். இறைவனை நாயகனாகப் பாவித்துப் பாடிய அகத்துறைப் பாடல்கள் பல உண்டு சீகாழியையும் திருஞான சம்பந்தரையும் போற்றிப் பாடிய பாடலே திருக்கழுமல மும்மணிக் கோவை ஆகும். திருவிடை மருதூர் இறைவன் மீது பாடிய பாடல் திருவிடை மருதூர் மும்மணிக்கோவை ஆகும். இந்நூல் சமய சாஸ்திர நுட்பங்கள் கொண்ட ஞான நூல் ஆகும். காஞ்சிபுரத்தில் கோயில் கொண்டருளிய ஏகாம்பரநாதர் மீது பாடிய பாடல் திருவேகம்பமுடையார் திருவந்தாதி ஆகும். திருவொற்றியூர் தியாகேசப் பெருமான் மீது ஆசிரியப்பாவினால் பாடப்பெற்ற பாடல் திருவொற்றியூர் ஒருபா ஒருபஃது ஆகும்.

பதினோராம் திருமுறையில் இடம் பெற்றுள்ள பட்டினத்தடிகளின் பாடல்களை விட வேறுபல பக்திப் பாடல்களும் இவருடைய பெயரால் வழங்கப்படுகின்றன. பதினெண் சித்தர் பாடல்களிலும் பட்டினத்தார் பாடல் இடம் பெறுகிறது. நம்பியாண்டார் நம்பிகளுக்கு முன் வாழ்ந்த பட்டினத்தடிகள் வேறு, பின்வந்த நிலையாமைப் பாடல்கள் ,அடங்கிய பாடல்களைப் பாடியவர் வேறு என்பது ஆராய்ச்சியாளர்களின் முடிபாகும்

இராஜராஜ சோழனின் வேண்டுகோட்படி திருமுறைகளைப் பதினொன்றாகத் தொகுத்தவர் நம்பியாண்டார்நம்பி அவர்கள். இவர் திருநாரையூர்ப் பொல்லாப் பிள்ளையாரின் திருவருளைப் பெற்றிருந்தார். இராஜராஜ சோழன், அவன் மகனாகிய இராஜேந்திர சோழன் ஆகிய இருவரின் ஆட்சிக் காலத்தில் இவர் வாழ்ந்தார். இவர் பத்துப் பிரபந்தங்களைப் பாடியுள்ளார்.

1] திருநாரையூர் விநாயகர் திருவிரட்டை மணிமாலை
2] கோயில் திருப்பண்ணியர் திருவிருத்தம்
3] திருத்தொண்டர் திருவந்தாதி
4] ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி
5] ஆளுடைய பிள்ளையார் திருச்சண்பை விருத்தம்
6] ஆளுடைய பிள்ளையார் திருமும்மணிக்கோவை

ஜீவன் முக்தன் எதற்காகவும் வருந்துவதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7] ஆளுடைய பிள்ளையார் திருவுலாமாலை
8] ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகம்
9] ஆளுடைய பிள்ளையார் திருத்தொகை
10] திருநாவுக்கரசர் திருஏகாதச மாலை

இவர் ஆறு பிரபந்தங்களைத் திருஞானசம்பந்தர் மீது பாடியுள்ளார். அப்பர் மீது ஒரு பிரபந்தம் பாடினார். திருத்தொண்டர் திருவந்தாதியில் அறுபத்து மூன்று தனி அடியார்களையும் ஒன்பது தொகை அடியார்களையும் பாடுகிறார். மாணிக்கவாசகரை கோயிற் பண்ணிய விருத்தத்தில் குறிக்கிறார். சம்பந்தரை அருந்தமிழாகரன் முத்தமிழாகரன் என்றும், அப்பரைக் கவிப்போகி என்றும், சுந்தரரை மதுரகவி என்றும் மாணிக்கவாசகரைத் திருவாதவூர்ச் சிவபாதத்தியன் என்றும் பாடுவார்.

தமக்குத் திருவருள் பாலித்த பொல்லாப் பிள்ளையார் மீது வெண்பாவும் கட்டளைக் கலித்துறையும் கலந்து திருநாரையூர் விநாயகர் திருவிரட்டை மணிமாலை என்ற இருபது பாடல்களைப் பாடினார். தில்லை நடராஜன் மீது பாடிய பிரபந்தம் கோயில் திருப்பண்ணியர் விருத்தம். ஆறும் சாக்கிய நாயனாரும் கண்ணப்பரும் செய்த வழிபாட்டை 'கல்லெறிந்தாலும் தன்வாய் நீர் கதிர் முடிமேல் உகுந்த நல்லறிவாளரும் மீளாவழி சென்று நலமலிவே' எனத் தமது பாடலில் குறிப்பிடுகிறார். நடராஜப் பெருமானது திருக்கூத்துக் தரிசனத்தைக் கண்டதால் பிறவிப்பயன் கிடைத்துவிட்டது என்று உள்ளம் உருகிப்பாடுவார்.

பிறவியிற் பெற்ற பயனொன்று கண்டிலம் பேரொளி நீர் நறவியல் பூம்பொழில் தில்லையுள் நாடகம் ஆடுகின்ற அறவியல் சோதியைச் சுந்தரக் கூத்தனைத் தொண்டர் தொண்டர் உறவியல்வாற் கண்கள் கண்டு கண்டின்பத்தை உண்டிட்டவே

சுந்தரர் செய்த திருத்தொண்டர் தொகையின் வழிவந்ததாய், சேக்கிழார் செய்த பெரியபுராணத்திற்கு வழிகாட்டியாய் அமைந்தது திருத்தொண்டர் திருவந்தாதி ஆகும். தொண்டர்களுடைய புகழ் பேசுவதால் பஞ்சேந்திரியங்களும் ஒடுங்கும் என்றும் ஊழ்வினைகள் ஓடும் என்றும் பாடுகிறார்.

சைவத்தமிழ் வித்தகர்
சிவ. மகாலிங்கம்
(விரிவுரையாளர் - பலாலி ஆசிரியர் கலாசாலை)

## நாலு யுகங்களிலும் வாழ்ந்த மனிதர் பற்றிய வரலாற்றையும்

## தெற்குப் பாகத்தில் அமைந்துள்ள கலியுகம் பற்றிய வரலாற்றையும்

### புலிப்பாணி முனிவர் தன்பாக்களின் மூலம் பின்வருமாறு விளக்குகின்றார்

மேலே கூறப்பட்ட "தோட்டம் என்பது பூமாதேவியையும்" "நதியென்பது மேருமலையையும்" "ஏதேன் என்பது மேருவுக்கு வட பாகத்தையும்" கருதுவன.

இந்து சாஸ்திரங்கள் கூறும் பூமிதேவி என்பது பிருதுவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் என்னும் ஐந்து மண்டலங்களையும் அடக்கியது. அதன் சுற்றளவை பின்வரும் சூத்திரங்களைக் கொண்டு காண்க: "இரவி ஐம்பத்திரண்டேகால் இலக்கமதுவே எவர்க்கும் மத்தியாய் வளர்வர்" எனச் சோதிட சாஸ்திரம் கூறுகின்றபடியும் சூரிய சித்தாந்தம் பூதளம் அதிகாரம் 59ம் வசனம்.

ஆனால் மேற்குத் தேசவாசிகள் கூறும் பூமியென்பது பிருதுவி மண்டலத்தை மாத்திரம் கருதும். இது மகா பூமிதேவியின் அந்தியிலொரு பாகமாகும். அதன் வடிவம் பந்துபோல் உருண்டையல்ல, நாற்சதுரப்பட்டது.

சென்ற ஐம்பது வருடங்களாக ஐரோப்பிய அமெரிக்க சாதிகள் வட துருவத்தை முதல் கப்பல்கள் மூலமாகவும் தற்காலம் ஆகாய விமானங்கள் மூலமாகவும் விரைவாக சேரத் தெண்டித்து வருகிறார்கள். வட துருவந் தினந்தம் ஐந்தாவது மண்டலமாகிய ஆகாச மண்டலத்தைக் கருதும். இதனை விரைவாகச் சேருதல் அதிக லேசான வேலையென அவர்கள் கருதுகிறார்கள். நாங்களிருக்கும் பிருதுவி மண்டலத்திருந்து முதல் அப்பு மண்டலத்தைக் கடக்க வேண்டும். இதைக் கடந்து தேயு மண்டலத்தை யடைய வேண்டும். இதனை அக்கினி மண்டலமென்றுஞ் சொல்வர். இதுவும் அப்பு மண்டலத்தைப் போல அதிக விஸ்தாரமுள்ளது. இதனைத் தாண்டிய பின் வாயு மண்டலத்தையடைவர். வாயு மண்டலத்தைத் தாண்டிய பின் ஆகாச மண்டலத்தையடைவர். வட துருவம் என்பது இதுதான்.

நெங்கவும் அதுவும் ஒருவிதி வருமானமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்ததால் இலங்கையென்று பெயர். இது 'குபேரன் காலத்தில் ஆயிரத்தெட்டு பாகங்களாகப் பிரிக்கப்பட்டு ஆளப்பட்ட தேசம்' எனக் கந்தபுராணம் கூறுகின்றது. இவன் "இந்திரமா ஞாலத்தேர்" என்னும் பெயருள்ள ஒரு ஆகாச விமானத்தை வைத்திருந்தான். விரும்பிய இடங்கட்குப் பயணம் பண்ணிப் பின் தன் இராசதானிக்குத் சென்றமையை அறிகின்றோம். தற்கால ஐரோப்பியர் பறிப் பிரயாணஞ் செய்யும் இரும்பு, செம்பால் செய்யப்பட்ட விமானத்திலேறி அவ்விடத்தைச் சேர்கவிலேயாகிறது.

சனாதிரளயத்தின் பின் "மனு" என்பவர் கலியுகத்திலுள்ள சனங்களுக்கு வேண்டிய நீதி கட்டங்களை உண்டாக்கி அவைகளை நிலை நிறுத்தி அக்கட்டங்களின்படி உலகத்தை நடத்தினான் மேன்படி இமயமலையைத் தமதிருப்பிடமாக்கிக் கொண்டனர். அவர் சமாதி அடைந்தபின் அவருடைய திருமேனியை அவருடைய குமாரர்கள் அம்மலையின் உயர்ந்த பாகமாகிய "கைலாசம்" என்னுஞ் சிகரத்திற் கொண்டு போய் அடக்கஞ் செய்தார்கள். அவ்விடத்தில் அவரைச் சமாதி வைத்தபடியால் அப்பாகம் வெள்ளியங்கிரி என்றும், கைலாச மலையென்றும், அமர்நாதமென்றும் அழைக்கப்பட்டு வருகின்றது. அது பன்னிரண்டு மாசங்களும் பனிக்கட்டியால் மூடப்பட்டிருப்பதால் அவ்விடத்திலுள்ள குளிரைத் தாங்கிக் கொண்டு அவ்விடத்திற்குப் போய்ச் சேரத் தற்கால நாலுமுழு பலிருக்கு முடியாமலிருக்கிறது.

சைவ சமய நூல்கள் அவரைச் சிவபெருமானென அழைக்கின்றன. அவருடைய அருளைப் பெறும் நோக்கமாய் அநேக புண்ணியாத்துமாக்கள் இமயமலையடிவாரத்தில் தபசு செய்து கொண்டிருக்கிறார்கள் அவர்களிற் சிலரை அவருடைய இருப்பிடத்திற்கு வருசமொருமுறை அழைத்து ஆவணிமாதப் பூரணையின்று தமது திருத்தோற்றத்தைக் கொடுத்துத் தம்மை வெளிப்படுத்தி வருகின்றனரென அறிகின்றோம். அவருடைய அழைப்பைப் பெற்றவர்கள் புறப்பட்டுக் குறித்த தினத்தில் இமயமலையின் ஓர் ஸ்தானத்தையடைவர், அந்தஸ்தானத்தையடைந்தவுடன் அவர்கள் ஒவ்வொருவருக்கும் புலிமால் இறைக்கப் பெற்ற பாதரட்சை, குடை, நெருப்புச்சட்டி என்னும் மூன்று சாமான்கள் கொடுக்கப்படும்.

அமரர்நாதம் செல்லும் பாதையில் பனிக்கட்டியால் சதா மூடப்பட்ட மலைகளும், பள்ளத்தாக்குகளும் இருப்பதால் அவைகளைத் தாண்டிச் செல்வதற்கு இம்மூன்று சாமான்களும் இன்றியமையாததாயிருக்கின்றன. ஆதலால் இவைகளைப் பெற்றுக் கொண்டு புறப்பட்டு இராப்பகலாய் நடந்து பூரணையின்று சூரியோதயத்திற்கு முன்பு

★ விடா முயற்சி வெற்றி அளிக்கும். ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவாற்றையுடையவர். அமர்நாதத்தை அடைந்தார்களென்பதற்கிதுவே குறிக்கப்பட்ட அடையாளமாகும். அவ்வாறின்றித் தானென்ப பின்னர் ஒரு உயர்ந்த மேடை தோற்றப்படும். அவர்கள் அவ்விடத்தைச் சேர்ந்து அதைச் சூழ்ந்து நின்று குறித்த நேரம்வரையும் பொறுமையுடனும் பயபக்தியுடனும் காத்திருப்பார்கள். இதுவே மறு என்பவரின் சமாதி ஸ்தானமாகும்.

பத்திரமாய்ப் பிரார்த்தனைகளும் இடிமுழக்கங்களும் கேட்கப்படும். அதன் பின்னர் அம்மாடத்தில் நாற்சதுரப்பட்ட ஓர் பனிக்கட்டி மேடையுண்டாகும். அதன் நான்கு கோணங்களிலும் நான்கு வேதங்கள் தோற்றப் படும். அவைகளின் மத்தியில் ஓர் சிவலிங்கம் முளைத்துச் சற்றுச் சற்றாய் வளர்ந்து பகல் பன்னிரண்டு மணிக்குள் மூன்று முழ உயரத்தையடையும். அதன் பின்னர் படிப்படியாகக் குறைந்து சாயங்காலம் ஆறுமணிக் குள்ளாகச் சகல தோற்றங்களும் மறைந்துவிடும். அத்திருக்காட்சியைக் கண்டு களித்த பின்னர் அவர்கள் வந்தபாதையால் மறுபடியும் தங்கள் ஸ்தானத்திற்குத் திரும்பிப் போகாமல், அவர்களெல்லோரும் ஒரு நாற் சதுரமுள்ள பலகையன்றை வைத்து அதன்மேல் உட்கார்ந்து கொண்டால் அப்பலகை கீழ்ப் பூமியை நோக்கிப் போவதாகக் காணப்படும். சிறிது நேரத்தில் அவர்கள் இமயமலையின் அடிவாரத்திலுள்ள ஓர் பாகத்தில் கொண்டு வந்து விடப்படுவார்கள்.

பற்றற்றுத் தவம் புரியும் புண்ணியவான்கள் ஒவ்வொருவருடமும் அமர்நாதம் சென்று இத்திருக்காட்சியைத் தரிசித்துத் திரும்புகிறார்கள்.

ஆனிநாதன், சுந்தரமூர்த்தி நாயனார், சேரமான்பெருமான் ஒளவையார் முதலான சிவ அடியார்கள் கைலாசம் போனார்களென்ற சரித்திரமிதனைக் கருதும்.

வடகைலாசம், தென்கைலாசம் என்றும் இரு கைலாசங்களுள. இவற்றுள் ''வடகைலாசம்'' இமயகிரி பர்வதத்தின் கண்ணுள்ள 'மறு' என்பவரின் சமாதியையும், 'தென்கைலாசம்' இலங்கையில் கதிர்காமத்தின் கண்ணுள்ள கல்யாணகிரி என்பவரின் சமாதியையும் கருதுவன.

மறுவென்பவர் அடைந்த சிவபதவியின் சாயுச்சிய ஒழுக்கத்தை சிவயோகமென்றும் கல்யாணகிரி என்பவர் அடைந்த குமரபதவியின் சாயுச்சிய ஒழுக்கத்தைக் கந்தயோகமென்றும் அழைக்கின்றனர்.

இருவர்கள் வடக்கே தலை வைத்துக் கிடப்பதை யாரேனும் காண்பரேல் அதனையொழிக்க வேண்டுமென்று கூறுவர். நியமம் என்ன வென்று கேட்பின் அத்திசையின் கண் காந்தமலையுளதென்பர். அம் மலையின் தென்பாகமாய் ஆயிரமென்றும் புண்ணிய கண்டத்தைப் பற்றித்து இந்து சமுத்திரத்தில் எழுந்தருளியிருக்கும் இலங்காதீபத்தின் வட பாகத்தை யாழ்ப்பாணமென்பர் இதுவே சூடாநாடு. முற்றிற்று.

"சிவம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகெங்கும்

# விநாயக வழிபாடு

முழு முதற் கடவுளுக்கு முதல் வணக்கம் செய்வதாகவும், மூத்த திருமகனாகவும் திகழும் மூஷிக வாகனனாகிய விநாயகப் பெருமானின் வணக்கம் ஆதிகாலத்தில் இருந்தே உலகெங்கும் கொண்டாடப்பட்டு வருகிறது. நாம் எந்தக் காரியத்தைச் செய்தாலும் அது வெற்றிகரமாக அமைய வேண்டும் என்று அதற்கு முன்னராக நடைபெறும் பிரார்த்தனையும், பூசைகளும் சுபகாரியமாக முடிய வேண்டும் என்று எவ்வழியே நாம் விநாயகப் பெருமானை வணங்குகின்றோம். இந்த வழிபாடு மிகவும் சிறப்பாய் அமைய விநாயக விரதங்கள் துணை நிற்கின்றன. இவற்றில் விநாயகர் சதுர்த்தியும், பிள்ளையார் கதை விரதமும் முக்கியமானவை ஆகும். சதுர்த்தி மாதம் தோறும் வரும். பிள்ளையார் கதை அதாவது பெருங்கதை வருடத்தில் ஒருமுறை 21 நாட்களுக்கு அனுட்டிக்கப்படும். இக்காலத்தில் பெரும்பாலான கோவில்களில் பிள்ளையார் கதையை அகவற்பா வடிவத்திலும், மற்றும்சில கோவில்களில் மட்டும் புராணத்தைப் படித்துப் பயன் சொல்லுவதும் நடைபெறும்.

விநாயகருக்குப் பிடித்த பத்திர, புஷ்பங்கள் 21 ஆகும். எனினும் மிகவும் பிடித்தவை வன்னியும், அறுகம் புல்லுமாகும். விநாயகருக்கு உரிய பத்திர புஷ்பங்கள்.

மருகு மாசிப் பச்சை நறுங்கை கத்தகாளை
வில்வமுடன் ஊமத்தை நொச்சி நாயுருவி
ஏதமில் கத்தரி வன்னி அலரி கண்டங்கத்திரி
எருக்கு மருதுடன் மால் பேரி விஷ்ணுகிராந்தி
மாதுளையே தேவதாரும் அறுநெல்லி
மன்னு சிறு சண்பகமே கெந்தகனி பாதிரியே
ஓதரிய மருது இவையோர் இருபத்தொன்று
உமை விநாயகர் சதுர்த்திக்கு உரைத்த பத்திரமே.

விநாயகரை விரும்பிய காரியமான நேரத்தில் விரும்பிய இடத்திலேயே எழுந்தருளச் செய்து வணங்கும் வழக்கும் உண்டு. அதாவது பசுவின் சாணி அல்லது மஞ்சள்மா அறுகம் புல்லுடன் விநாயகரை ஆவாகனம் செய்து வழிபடலாம். எந்தவொரு கோவிலிலும் விநாயகருக்கு முதலிடமும் சிறப்பிடமும் உண்டு.

சத்தியம் தான் கடவுள் ஒளிதான் அவரது நிழல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யப்பான் தேசத்திலே நின்ற நிலையில் இருவிநாயகர் உருவங்கள் ஒன்றை ஒன்று தழுவிக் கொண்டிருக்கும் நிலையைக் காணலாம். இதற்கு '' குவான் - ஸி - தியென் என்று பெயர்.

நேபாள தேசத்திலே கண்டுபிடிக்கப்பட்ட ஒரு விநாயகர் சிலையில் ஏழு கரங்கள் இருக்கின்றன.

தென்னிந்தியாவிலே கும்பகோணத்திலே நாகேஸ்வரர் சுவாமி கோவிலிலே கங்கை கொண்ட விநாயகர் எழுந்தருளியுள்ளார்.

யாவா தேசத்திலே உள்ள ஒரு விநாயகர் சிலையைச் சுற்றி மண்டையோடுகள் மாலைபோல் அமைந்துள்ளன. இதற்குக் காலகணபதி யென்றுரைப்பர்.

நமக்குக் கிடைக்கும் விநாயக உருவங்களில் மிகப்பழமையானது இந்தியாவில் இல்லை சீனாவில்தான் கிடைத்தது. குங்சின் என்னும் இடத்தில் உள்ள ஒரு பௌத்த குகைக் கோவிலுள் அந்த உருவம் இருக்கின்றது. அது கி. பி. 31ம் ஆண்டில் செதுக்கப்பட்டது. இதைவிட சீனா, துருக்கிஸ்தானிலும் விநாயகர் உருவம் கிடைத்திருக்கின்றது. மேலும் பர்மா, மலேயா, சயாம் போன்ற நாடுகளிலும் இங்கிலாந்து அமெரிக்கா போன்ற நாடுகளிலும் விநாயகர் வழிபாடு காணப்படுகின்றது.

சி. சதுரசிலம்
தெல்லிப்பழை

---

அருளுரைகள்

குலத்தின் கடமையை நிறைவேற்றுவது கர்மம். இந்த வகையில் தமிழர்களாகவும் இந்துக்களாகவும் இருக்கின்ற நாம் எமது அருளாளர்களது பெருமைகளை நினைவு கூர்வது எமது தர்மமாகும். இவ்வாறு பெரியவர்களையும், அருளாளர்களையும் நினைவு கூரும் பொழுது அந்தச் சுடர் எமக்குள் உள்வாங்கப்படுகிறது. இதனால்தான் அருளுரைகளை கொண்டாடுகின்ற வழக்கத்தை எமது மூதாதையர்கள் போற்றிக்கொண்டு வருகின்றனர்.

பல்கலாசார மலர் வெளியீட்டில்
திருமதி நாச்சியார் செல்வநாயகம் அவர்கள்

---

மாசுடையோர் அனைவரும் வலிமை இல்லாதவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மானுடத்தை மேன்மைப் படுத்தும் மாண்புமிகு கோட்பாடுகள்

### (மகாபாரதத்திலிருந்து)

# குருதரிசனம்

அஸ்தினாபுரியில் மைத்துனராகிய கிருபாச்சாரியார் இல்லத்தில் துரோணாச்சாரியார் தங்கியிருந்தவேளை ஒருநாள் மாலைநேரம் வீதிகளில் உலாவிக் கொண்டிருந்தார். அப்போது ஒரு கிணற்றைச் சுற்றி அரசகுமாரர்கள் பலர் நிற்பதைக் கண்ணுற்று அவ்விடம் ஏகினார். பெரியவரான துரோணாச்சாரியாரைக் கண்டதும் அவ்வரசகுமாரர்கள் ஒரு பந்தும் தமது கணையாழியும் கிணற்றினுள் வீழ்ந்துவிட்டதையும் அவற்றை எடுக்க முடியாது தவிப்பதையும் அவருக்கு எடுத்துரைத்தனர். அரசகுமாரர்களின் உரைகளைச் செவிமடுத்த துரோணாச்சாரியார் புன்முறுவல் பூத்தவராய் அம்பொன்றைக் கிணற்றினுட் செலுத்திக் கணையாழியையும் பந்தையும் வெளியே எடுத்தார். பந்தையும் கணையாழியையும் பெற்ற அவ்வரசகுமாரர்கள் மகிழ்வுடன் "சுவாமி தாங்கள் யார்? தங்கள் இருப்பிடம் எங்குள்ளது" என்று ஆர்வத்துடன் வினாவினர். அப்போது துரோணாச்சாரியார் "உமது பாட்டனாராகிய பீஷ்மரிடம் சென்று எனது உருவத்தையும் செயல் வல்லமையையும் அறிவியுங்கள். அவர் என்னை அறிந்து கொள்வார். அப்போது நீங்களும் நான் யாரென்பதை அறிந்து கொள்வீர்கள்" என்றுவிட்டுப் பகர்ந்தார். உடனே அரசகுமாரர்கள் பீஷ்மரிடம் சென்று நடந்தவற்றை எடுத்துரைத்தனர். பீஷ்மர் தான் கேட்டவற்றை வைத்தும் துரோணாச்சாரியாரே அவரென உணர்ந்து அவர் இருப்பிடத்தை ஏவலாளர் மூலம் அறிந்து துரோணாச்சாரியாரின் இருப்பிடத்தை அடைந்தார்.

துரோணாச்சாரியாரை அவரில்லத்தில் சந்தித்த பீஷ்மர் அவருக்குப் பல மரியாதைகள் செய்து, அவரைத் தமது அரண்மனைக்கு அழைத்து வந்தார். துரோணாச்சாரியாருக்குத் தங்கும் வசதிசெய்து கொடுத்து உணவு, உடை என்பன போன்ற தேவைகளை நிறைவேற்றி அவரைக் கௌரவித்து மகிழ்ந்தார். பின்னர் "எனது பேரக் குழந்தைகளாகிய பாண்டவர்களையும் கௌரவர்களையும் தங்களது சீடர்களாக ஏற்றுச் சிறந்த அஸ்திரப் பயிற்சியளிக்கவேண்டும்" என்று கேட்டுக் கொண்டார். பீஷ்மரின் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட துரோணாச்சாரியார் நன்னாள் ஒன்றில் அரசகுமாரர்கட்கு தனுர்வேதத்தைக் கற்பிக்க ஆரம்பித்தார். மிக்க அக்கறையுடனும் மகிழ்வுடனும் பாண்ட

---

★ வீண் பெருமை எவனையும் வீழ்த்தி விடும் ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்களும் கௌரவர்களும் வித்தை பயின்றுவரலாயினர். அவர்களின் திறமைகளைக் கண்டு உவகை கொண்டார் துரோணாச்சாரியார்.

தனது சீடர்கள் அனைவருக்கும் தகுந்த முறையில் பயிற்றுவித்து வந்த துரோணாச்சாரியார் ஒருநாள் தனது சீடர்கள் அனைவரையும் நோக்கி " எனது மனதில் ஓர் சபதம் உள்ளது. அச்சபதத்தை உங்களில் யார் எனக்கு நிறைவேற்றித் தருவீர்கள்? " என்று வினாவினார். எல்லோரும் மௌனமாகவிருந்த வேளையில் பாண்டவர்களுள் ஒருவனாகிய அர்ச்சுனன் மட்டும் எழுந்து பணிவாகக் குருவை வணங்கி " சுவாமி தங்கள் சபதம் எதுவாகினும் யான் முடித்துத் தருகிறேன் " என்று அடக்கத்துடன் கூறிநின்றான். அர்ச்சுனனின் உரைகளால் மகிழ்வுற்ற துரோணாச்சாரியார் அவனை உளமார ஆசீர்வதித்து, அவன்பால் மிக்க பிரியமுள்ளவராக நடந்து வரலானார். அர்ச்சுனன்மீது துரோணர் கொண்டிருந்த விசேடபற்றுதல் காரணமாகக் கௌரவர்கள் அர்ச்சுனன் மீது பொறாமையுடையவராயினர். இப்பொறாமை பின்மேலும் வளர்ந்ததின் வசத்தால் பல சந்தர்ப்பங்கள் ஏற்படலாயிற்று. மிகுந்த பக்தியும் தனுர் வேதத்தில் ஆழ்ந்த ஆர்வமும் பெரும் அடக்கமும், உடைய அர்ச்சுனனைத் தனது சிறந்த சீடனாகக் கருதி வந்தார் துரோணாச்சாரியார். ஒருநாள் அவர் அர்ச்சுனனை நோக்கி " அர்ச்சுனா! உனதியல்புகள் உண்மையில் எனக்கு அளவுகடந்த அபிமானத்தை ஏற்படுத்தியுள்ளது. எனவே உன்னில் மிக்க ஒருவன் இல்லை என்னும் வகையில் உன்னை வில்வித்தையில் மேம்பட்டவனாக உயர்த்துவேன்" என்று கூறி அதற்குரிய விசேட விற்பயிற்சிகளை அர்ச்சுனனுக்குக் கற்பித்து வரலானார்.

## குருபக்தியின் வடிவம் (ஏகலைவன்)

துரோணாச்சாரியார் வில்வித்தை கற்பிப்பதில் தலைசிறந்த ஆசான் என்பதனை அறிந்து கொண்ட வேடர் குலத்தவனாகிய ஏகலைவன் " என்பான் அவரிடம் வில்வித்தை கற்க விருப்பம் கொண்டான். ஏகலைவன் துரோணாச்சாரியார் இருக்கும் இடத்தை அடைந்து அவர்பாதங்களில் வீழ்ந்து வணங்கி " சுவாமி அடியேனுக்கும் தங்கள் வில்வித்தை கற்றுத் தரவேண்டும் " என்று விண்ணப்பித்துக் கொண்டான். ஏகலைவனின் வேண்டுதலைச் செவியுற்ற துரோணாச்சாரியார் " வில்வித்தை அரசகுலத்தவருக்கு மட்டுமே கற்பிக்கற்குரியது " என்று கூறி ஏகலைவனைச் சீடனாக ஏற்க மறுத்துவிட்டார். மிக்க மனக் கவலையுடன் வனத்திற்குத் திரும்பிய ஏகலைவன் துரோணாச்சாரியார் போன்று ஒரு சிலையை வடித்தான். அச்சிலையைக் குருவாகப் பாவனை செய்து அதற்குச் செய்யத்தக்கதான பூசை வழிபாடுகள் அனைத்தும் செய்து வில்வித்தை பயின்று வரலானான்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான சந்தர்ப்பத்தில் பாண்டவர்கள் துரோணரின் அனுமதியுடன் காட்டிற்கு வேட்டையாடச் சென்றனர். பாண்டவர்களுடன் சென்ற அவர்களின் வேட்டை நாய், வனத்திலே ஏகலைவனைக் கண்டது. அவனின் கரிய நெடிய உருவைக் கண்டு வெருட்சியுற்று அவனை நோக்கிப் பாய்ந்து சென்று குரைத்துத் தாக்க முயன்றது. இதனால் சினமடைந்த ஏகலைவன் ஏழு பாணங்களை ஒன்றாகத் தொடுத்து தாக்கிய போது, அவ்வேழு பாணங்களும் குறிதவறாது ஒன்றாகச் சென்று குரைத்து வந்த பாண்டவர்களின் நாயின் வாயில் தைத்தது. வேதனை அடைந்த நாய் பாண்டவர்களை நோக்கித் திரும்பி வந்தது. முன்னே சென்ற நாயின் வாயில் ஏழு பாணங்கள் ஒன்றாகத் தைத்திருப்பதைக் கண்டு ஆச்சரியமடைந்தனர் பாண்டவர்கள். இவ்வாறு பாணம் தொடுக்கும் வல்லமை பெற்றவன் யார் இங்கு உள்ளான்? என்று வனத்தில் தேடலாயினர். தேடியவர்கள் ஏகலைவன் இருக்கும் இடத்தைக் கண்டு அவனைப் பார்த்து "நாயின் வாயில் அம்புகளைச் செலுத்தியவன் நீயா?" என வினாவினர். அப்போது ஏகலைவன் அவர்கள் அரசகுமாரர்கள் என உணர்ந்து பணிவுடன் வணங்கி "ஐயனே நானே நாயினை வாயை அம்புகளால் தாக்கினேன். நான் இவ்வனத்தில் வசிப்பவன். எனது பெயர் ஏகலைவன். துரோணாச்சாரியாரின் சீடன் நான்" என்று அடக்கமாக மொழிந்து நின்றான். ஏகலைவனின் கூற்றுக்களைச் செவிமடுத்த பாண்டவர்கள் ஆச்சரியமுற்றவராய் வேட்டையை முடித்து அரண்மனை சென்றனர்.

அரண்மனையில் தமது குருவாகிய துரோணாச்சாரியாரைச் சந்தித்து வனத்திலே நடந்தவற்றை விரித்துரைத்தனர். தன்னிலும் மேம்பட்ட வில்லாண்மை பெற்ற வீரன் ஒருவன் இருப்பதை, அவன் துரோணாச்சாரியாரின் சீடனாக இருக்கிறான் என்பதையும் அர்ச்சுனன் மனதில் ஒரு சஞ்சலம் தோன்றலாயிற்று. துரோணாச்சாரியாரை ஒரு நாள் தனியே சந்தித்த அர்ச்சுனன் "சுவாமி உலகிலும் மேம்பட்ட வில்லாளி ஒருவரும் இல்லை என்னும் வகையில் உன்னைச் சிறந்த வீரன் ஆக்குவேன் என்று கூறி எனக்கு வில்வித்தை பயிற்றுவித்தீர்கள். ஆனால் இப்போது என்னிலும் மேம்பட்ட சிறந்த வில்வீரன் ஒருவன் வனத்தில் உள்ளான். அத்துடன் அவன் தங்களின் சீடன் என்றும் கூறிக் கொண்டான். இது எப்படிச் சாத்தியமாகும்?" என்று வினாவி நின்றான். துரோணரும் சிந்தனை வயப்பட்டவராய்ப் பாண்டவர்களை அழைத்துக் கொண்டு வனத்தை வந்தடைந்தார். வனத்திலே ஏகலைவன் இருக்குமிடத்தை அடைந்தனர் பாண்டவரும் துரோணாச்சாரியாரும். ஏகலைவன் தனது மானசீக குருவாகிய துரோணாச்சாரியார் தனது இருப்பிடத்திற்கு எழுந்தருளி இருப்பதனைக் கண்ணுற்று விரைந்து சென்று அவரின் பாதங்களில் வீழ்ந்து வணங்கி நின்றான்

வாழ்க்கை என்னவாக இருப்பினும் அது நல்லதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போது துரோணாச்சாரியர் ஏகலைவனை நோக்கி "நீ எனது சீடனாக இருப்பாயானால் எனக்குக் குரு தட்சணை தரவேண்டும்" என்று கேட்டார். உடனே ஏகலைவன் "சுவாமி கட்டளை இடுங்கள். தட்சணை எதுவாகிலும் நான் தரச் சித்தமாகவுள்ளேன்" என்று கூறி நின்றான். "அப்படியா! அப்படியாயின் உனது வலது கைப்பெருவிரலை எனக்குக் காணிக்கையாகத் தரக்கடவாய்" என்று மொழிந்தார். குருவின் வாய்மொழிகளைச் செவிமடுத்த ஏகலைவன் மறுகணமே, எவ்விதத் தயக்கமுமின்றித் தனது வலதுகைப் பெருவிரலைத் துண்டித்துக் குருவின் பாதங்களில் சமர்ப்பித்து வணங்கினான். இச்செயலைக் கண்ட பாண்டவர்கள் அதிசயித்து நின்றனர். அர்ச்சுனனின் மனதிலே தன்னிலும் மேம்பட்ட வில்வீரன் ஒருவன் இனி இருக்கப் போவதில்லை என்பதனால் பெரும் நிம்மதி தோன்றலாயிற்று. துரோணாச்சாரியாரும் பாண்டவர்களும் அரண்மனை திரும்பினர்.

தொடரும் ...

நூலகர்,
வலி வடக்கு பிரதேசசபை,
காங்கேசன்துறை,
(மல்லாகம்)

சைவப்புலவர்
செந்திரு. வ. குமாரசாமி ஐயர்

## முன்னோர் வழி

ஒரு முறை அரசன் ஒருவன் கிராமப்புறம் வழியாக வந்துகொண்டிருந்தான். வழியில் தள்ளாடும் கிழவன் ஒருவன் புதிதாக ஒரு மரக்கன்றினை நட்டுக்கொண்டிருந்தான்.

அவனைப் பார்த்த அரசன், "என்ன கிழவரே! காடு வா வா என்கிறது; வீடு போ போ என்கிறது. இதுதான் உம் நிலை. இந்நிலையில் மரக்கன்றினை நட்டுக்கொண்டிருக்கிறீர். இம்மரம் வளர்ந்து பயனளிக்கும் வரையில் நீர் உயிரோடு இருப்பீர் என்று நம்பிக்கை உமக்கு இருக்கிறதா!" என்று கேட்டான்.

அதற்கு அந்தக் கிழவன், "அரசே! என் முன்னோர்கள் நான் பயன் பெறுவதற்காக இந்த மரங்களை நட்டுச்சென்றுள்ளார்கள். அது போல நானும் என் பின்னால் வருபவர்களுக்காக ஏதேனும் செய்ய வேண்டும். அதற்காக இந்த மரக்கன்றை நட்டுக்கொண்டிருக்கிறேன்." என்றான்.

இதைக் கேட்ட அரசன், "பெரியவரே! உம் போன்றவர்களால்தான் நாடு நலமாகவும் வளமாகவும் உள்ளது" என்று கூறி அவரைக் கட்டித் தழுவிக் கொண்டான்.

அன்பற்ற வாழ்க்கை சாவுக்கு ஒப்பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டவன் படைப்பில்
# அனைவரும் சமம்

"உலகம் ஓர் குடும்பம். ஆண்டவன் நமது தந்தை. நாம் எல்லோரும் சகோதரர்கள்" என்ற மனப்பான்மையுடன் வாழவேண்டுமென்பதுவே எமது சமயத்தின் தத்துவமாகும். சைவசமய மக்களாகிய நாம் இந்த உண்மையை மறக்கக் கூடாது.

எமது முழுமுதற் கடவுளாகிய சிவம் அன்பே வடிவானவர் "அன்பே சிவம்" என்கின்றது திருமூலர் திருமந்திரம் "ஆண்டவன் படைப்பில் அனைவரும் சமம்" என்ற தத்துவம் நல்குவது எமது சைவம். ஏற்றத் தாழ்வுடைய சமூகம் செம்மையான சமூகமன்று. அதைச் சைவசமூக மென்று சொல்லல் ஆகாது. அங்கே சைவம் இராது.

"நான், எனது, என்னுடையது" என்ற ஆணவத்தை, அகங்காரச் செருக்கை வாழ்விலே அகற்றுவது சைவம். சாதி, சமய இன, நாட்டு, நிற, பேதங்கள் ஏதும் தோன்றாது! எல்லோரும் இறைவனின் படைப்புக்களே என்ற எண்ணத்தை மேலோங்கச் செய்வது சைவம். வெறுப்பு பகைமை, என்ற தீயசக்திகளைத் தூரவிலக்குவது சைவம். இம்மைக்கும் மறுமைக்கும் வழி வகுப்பது சைவம். எந்நாளும் உயர்ந்தாரும், தாழ்ந்தாரும், எவரும் ஒருமைப்பட்டோராய் ஒன்றுபட்டு இவ்வுலக வாழ்க்கையைச் செம்மை செய்யும் படி சைவம் நமக்குக் கூறுகின்றது.

தன்னில் இறைவனைக் கண்டுதான் தான் இறைவனாய் நின்ற தவயோகி மகாஞானி ஏற்றத் தாழ்வு இன்றிச் சகல உயிர்களிலும் கடவுளைக் கண்டுள்ளார்.

"அப்பனும் அம்மையும் சிவமே
  அரிய சகோதரரும் சிவமே
ஒப்பில் மனைவியுஞ் சிவமே
  ஒகரும் மைந்தருஞ் சிவமே
செப்பில் அரசருஞ் சிவமே
  தேவாதி தேவருஞ் சிவமே
இப்புவி யெல்லாம் சிவமே
  என்னையாண்டதுஞ் சிவமே"

மனதை மெல்ல மெல்ல அடக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற நற்சிந்தனைப் பாடல் மூலம் இறைவனை உலகில் உள்ள அனைத்து உயிர்களிலும் உறைந்துள்ளான் என்பதைத் தெள்ளத் தெளிவாக உணர்த்தியுள்ளார். மேலும் "யோகர் சுவாமிகள்

மக்களும் பொருள்களும் வாழத் தொழில் புரியும்
பக்கமெல்லாம் இறைவன் வடிவல்லவோ
அக்கம் துறந்துழலி ஐயா எனக் கையேந்தி
அகத்தின் அருகிலே அழைப்போன் அவனல்லவோ.

என்ற பாடலின் மூலம் எல்லா உயிர்களும் இறைவனின் படைப்பு என்ற தத்துவத்தை அழகாகப் பாடியுள்ளார்.

இன்று ஆலயங்கள் பல உண்டு. திருவிழாக்கள் ஆன்மீக நிகழ்ச்சிகள் நிகழ்த்தப்படுகின்றன. கோடிக்கணக்கான மக்கள் தவறாது ஆலயங்கள் சென்று பிரார்த்தனைகள் நடாத்திய வண்ணமே இருக்கின்றார்கள். எல்லா இல்லங்களிலும் இறைவனது படங்களை வைத்துத் தீபம் ஏற்றி, காலையும் மாலையும் இறைவனை வணங்கவும் தவறுவதில்லை. ஆனால் அன்பு அமைதி அருள் நமது மத்தியில் குன்றியே காணப்படுகின்றன. இதற்குக் காரணம் நாம் மக்கள் மீது அன்பு செலுத்தாது எமது சைவத்தத்துவங்கள் "ஒரு புறம் எமது வாழ்வு மறுபுறமாக வாழ்வது தான். நாமனைவரும் சைவர்களெனக் கொண்டிருந்து வாழ்கின்றோம். சைவ வாழ்க்கைக் கோட்பாடு ஒன்று; வாழ்க்கை நடைமுறை வேறொன்றாக வாழாமல் மனத்தைப் பக்குவப்படுத்தி, சமய நெறியில் வாழ வேண்டும். அன்பு வடிவானவ சிவம். ஆன்மாக்களாகிய நம்மை அன்பு வடிவாகப் படைத்து இருக்கிறார். அன்பு செய்து வாழப் படைத்திருக்கிறார். இதை உணர்ந்து சைவர்களாகிய நாம் வாழும் போது தான் தனி மனித அமைதியும், குடும்ப அமைதியும், இல்ல அமைதியும், சமூக அமைதியும், நாட்டின் அமைதியும் ஏற்படும். அன்பு, அருள், கருணை அறம் பெருகும்.

" வேடரின் அன்பும், வேதியரின் அன்பும் இறைவன் சந்நிதியில் சமமே " இருவரும் சைவரே. இருவரும் எம்பெருமானுக்கு இனியவரே. இதுதான் எமது சைவம் கூறும் தத்துவம். இதனைப் பெரிய புராணம் அழகாக விளக்குகின்றது. நாமும் சமூக சமத்துவம் கூறும் சைவசமயத்தை உணர்ந்து " ஒன்றே குலம் ஒருவனே தேவன் " என்ற முதுமொழியையும், " யாதும் ஊரே யாவரும் கேளிர் " என்ற நன்மொழியையும் வாழ்வில் கடைப்பிடித்து வாழ்வாங்கு வாழ வேண்டும். இறைவன் உல


இறைவனின் புகழ்பாடி ஆனந்தம் பெற வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குக்கே பொதுவானவன். அந்தப்பரம் பொருளிலே உலகிலுள்ள கோடானு கோடி உயிரினங்களும், எப்பொருட்களும் அடக்கம் என்பது எமது சமயம் எடுத்தியம்பும் தத்துவமாகும். "மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்."

சமூகஜோதி கா. கணேசதாசன் (J. P.)
ஓய்வு பெற்ற அதிபர்.



27 - 12 - 1998 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற திருவாசக விழா வின் போது நல்லை ஆதின முதல்வர் தலைமை தாங்கி உரையாற்றுகின் றார். வலது புறம் மருத்துவம்புறைப் பீடாதிபதி இராஜேந்திரப்பிரசாத் கலைத்துறைப் பீடாதிபதி சண்முகதாஸ் அவர்களும், இடது புறம், பேரவைச் செயலாளர் அகிலரத்தினமும், திருமதி மனோன்மணி சண்முக தாஸ் அவர்களும் காணப்படுகின்றனர்.

★ கடவுள் நமக்கு மிகவும் வேண்டியவர். ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கைத்துணை

வள்ளுவர் காலத்திலேயே பெண்களுக்கு உயர்வான இடம் வழங்கப் பட்டிருந்தது. இதனால்தான் மனைவியை வாழ்க்கைத்துணை என்றுகூறப் பட்டது. ஒரு இடத்தைத் தெரிந்து கொள்வதற்காக வழிகாட்டுபவருடன் ஒருவர் செல்லும் போது அங்கே வழிகாட்டுபவர்தான் பெருமதியா னவர். அப்பொழுது வழிகாட்டுபவர்தான் துணை. அவரை நம்பித்தான் இடம் தேடிச்செல்பவர் குறிப்பிட்ட இலக்கினை அடையமுடியும். அதே போலத்தான் இல்லறவாழ்க்கையில் ஒருவனுக்குத் துணையாக நின்று செயற்பட்டு இல்லறத்தானை சேரவேண்டிய இலக்கிற்கு அவனது மனைவியே அவனை இட்டுச்செல்கின்றாள்.

விருந்தினரை உபசரிக்கும் இயல்புடைய இளையான் குடிமாறநாய னாரிடம் இரவுநேரம் அதுவும் மழைபெய்து கொண்டிருக்கும் பொழுது விருந்தினர் ஒருவர் வந்து சேர்கின்றார். அப்பொழுது விருந்தினரை உபசரிக்கக்கூடிய எந்தவசதியும் அவர்களிடம் இருக்கவில்லை. ஆனால் இளையான்குடிமாறநாயனாரின் மனைவி வயலில் விதைத்து வெள்ளத்தில் மிதக்கும் நெல்லை அரிக்கும், கொல்லைப்புறத்திலே உள்ள கீரையை கறிக்கும், வீட்டுக்கூரையின் தடிகளை விறகிற்கும் பயன்படுத்தி வந்த விருந்தினரை உபசரிக்கலாம் என்று கணவனுக்கு ஆலோசனை கூறுகின் றாள் அதன் படியே இருவரும் செயற்பட்டு வந்திருந்த விருந்தினரை உபசரிக்கின்ற நிலையைப்பார்க்கின்றோம். அந்த மனைவி எவ்வாறு வாழ்க்கைக்கு ஏற்ற சிறந்த துணையாக செயற்பட முடிந்தது என்பதை நாம் பார்க்கின்றோம் அல்லவா.

சந்நிதியான் ஆச்சிரம ஆதரவில்
யா/ தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை
மகா வித்தியாலய வள்ளுவர் விழாவில்
செல்வி ஸ்ரீ. நமசிவாயக்குருக்கள் உரையிலிருந்து.

★ உழைப்பும் நம்பிக்கையும் சேரும் இடத்தில் வறுமை இருக்காது. ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோடும் எழுத்தும்

யா/வண் நாவலர் மகா வித்தியாலயம்
யாழ்ப்பாணம்

ஒரு ஜமீன்தாரின் மகனும், ஓர் ஏழை வீட்டுப் பையனும் ஓர் பள்ளிக்கூடத்தில் படித்துக் கொண்டிருந்தார்கள்.

ஜமீன்தாருக்குப் பணமே பிரதானம். ஆகவே அவர் தன் மகனுக்கு இறைபக்தியை புகட்டவில்லை. அதனால் அவனுக்குக் கல்வியும் வரவில்லை.

ஆனால் ஏழைப்பையனின் தகப்பனார் இறைபக்தியில் சிறந்தவர். ஆகவே அவரது மகனும் நன்றாகப் படித்து வந்தான்.

ஒரு நாள் அந்தப் பள்ளிக்கூடத்திற்கு உயர் அதிகாரி வந்தார். ஜமீன்தாரின் பையன் எந்தக் கேள்விக்கும் சரியாகப் பதில் சொல்லாததைக் கண்டு வருத்தம் அடைந்தார். கடைசியில் கரும்பலகையில் 'ட' என்று எழுதி, " இது என்ன தெரியுமா? என்று கேட்டார்.

" தெரியும் " என்று பளிச்சென்று ஜமீன்தாரின் பையன் பதில் அளித்தான். ஆசிரியரும் உயர் அதிகாரியும் 'இந்த ஒரு கேள்வியாவது தெரியும் என்கிறானே!' என்று மகிழ்ந்து விடையை எதிர்பார்த்தனர்.

ஜமீன்தார் பையன், " அது ஒரு கோடு " என்று பதில் அளித்தமை எல்லோருக்கும் ஏமாற்றத்தை ஏற்படுத்தியது.

உடனே ஏழைப்பையனைக் கேட்டதும் அவன் " ட ( டனா )" என்று பதில் அளித்தான்.

படிப்பு இல்லாதவனுக்கு அந்தக் கரும்பலகையில் எழுதியது வெறும் கோடுதான். படித்தவனுக்கு அது 'ட' என்று தெரியும்.

அது போல் கடவுள் நம்பிக்கை இல்லாதவர்களுக்கு கோயிலில் உள்ள இறைவன் 'சிலை' கல்லாகத்தான் தெரியும். இறைவனை நம்பிக்கையுடன் வழிபடும் பக்தனுக்கு அது கல்லாகவும் தெரியாது சிலையாகவும் ஏற்கமாட்டான். அதுவே இறைவனின் திருவுருவம் என்று நினைத்துப் போற்றிப் புகழ்ந்து வரம் பெற்று நல்வாழ்வு வாழ்வான்.

ஒரு அறிவுரை.

ஆக்க போராட்டம் தரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருடாந்த வள்ளுவர் விழா

சந்நிதியான் ஆச்சிரமம் பல்வேறு ஆத்மீகப் பணிகளை மேற் கொண்டு வருவது நாம் அறிந்ததே. இவ்வாறான ஆத்மீகப் பணிகளுடன் சில சமூகத்தொண்டுகளையும் அது மேற்கொண்டு வருகின்றது. அவற்றில் ஒன்றுதான் சந்நிதியான் ஆச்சிரமத்தின் ஆதரவில் யா/ தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயத்தில் வருடாந்தம் நடைபெற்று வரும் வள்ளுவர் விழாவாகும்.

1999 ஆம் ஆண்டு வள்ளுவர் விழா 11-04-99 சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் பாடசாலையின் பிரார்த்தனை மண்டபத்தில் அதிபர் திரு. ந. அரியரத்தினம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவில் பிரதமவிருந்தினராக கல்வித்திணைக்களக் கட்டடப் பொறியியலாளர் திரு. கு. சிவபாலன் அவர்கள் கலந்துகொண்டார்கள். இவ்விழாவின் சிறப்புச்சொற்பொழிவை சிவஸ்ரீ கை. நமசிவாயக் குருக்கள் அவர்கள் வழங்கினார்கள்.

பிரதம விருந்தினராகக்கலந்து கொண்ட திரு. கு. சிவபாலன் அவர்கள் தமது உரையின் தன்னை இந்த நிலைக்கு வளர்த்தவர்கள், தனக்கு கல்வி கற்பித்த ஆசிரியர்களே என்று குறிப்பிட்டு ஆசிரியர்களின் முக்கியத்துவத்தை எடுத்துக்கூறினார்கள். தாம் கல்விகற்கும் பொழுது, பாடத்திட்டத்தில் உள்ளவற்றைக் கற்றதுடன் அதற்கு மேலாக வள்ளுவர் பாரதியார் போன்றோருடைய வாழ்க்கைக்கு வழிகாட்டும் பயனுள்ள வாழ்க்கைக்கல்வியையும் கற்றதனால் தனது வாழ்க்கையை வளப்படுத்த அவை உதவியாக இருந்தன என்பதையும் நன்றியுடன் குறிப்பிட்டார்.

சிவஸ்ரீ கை. நமசிவாயக்குருக்கள் தமது சிறப்புச்சொற்பொழிவில் வள்ளுவர் மதம், மொழி, இனம் என்பவற்றைக் கடந்து உலகம் முழுவதற்கும் வழிகாட்டக்கூடிய கருத்துக்களைத் தெரிவித்து ஒரு தெய்வப் புலவர் என்று குறிப்பிட்டார். வள்ளுவர் வாழ்க்கையின் பல்வேறு துறைகளுக்கும் வழிகாட்டக்கூடிய பலகருத்துக்களை எவ்வாறு மக்களுக்கு வழங்கினார். என்பதை திருக்குறளின் பல்வேறு அதிகாரங்களிலிருந்தும் பல உதாரணங்கள் மூலம் நமசிவாயக்குருக்கள் சபையோருக்கு எடுத்து விளக்கினார்கள்.

மிகுந்த ஆவலுடன் எதையும் எதிர்பார்க்காதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பின் சிறப்பை எடுத்துக்கூறிய குருக்கள் அவர்கள் ஒருவன் இல்லறத்தில் ஈடுபடும் பொழுது தனது மனைவியிடத்து அன்பை செலுத்து கின்ற வாய்ப்பு ஏற்படுகின்றது, பின்பு குழந்தைகள் பிறக்கும் பொழுது அந்த அன்பு மேலும் விரிவடைந்து செல்கின்ற பாங்கினையும் எடுத்துக் கூறினார்கள். இவ்வாறு இல்லறத்தாலுண்டா அன்பு வியாபித்துச்சென்று இவ்வுலக வாழ்க்கைக்கு அத்திவாரமாகிய அன்பிற்கு வழிவகுப்பதை சபையோருக்கு எடுத்துக்கூறினார்கள். இவ்வாறு வள்ளுவர் துறவறத்தை விட இல்லறத்திற்கே அதிகமுக்கியத்துவத்தை வழங்கியுள்ளதையும் குறிப் பிட்டார்.

மேற்படி பாடசாலையில் கல்விகற்றுக் கொண்டிருக்கின்ற மாண வர்கள் தரரீதியாக 5 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு அவர்களுக்கிடையே திருக்குறள் போட்டி நடாத்தப்பட்டிருந்தது. இப்போட்டிகளில் வெற்றி யீட்டிய முதல் மூன்று மாணவர்களுக்கும் மற்றும் ஒவ்வொரு பிரிவிலும் ஐந்து மாணவர்களுக்கு ஆறுதல்பரிசில்களுமாக மொத்தம் நாற்பது மாண வர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. இப்பரிசில்களுக்கான நிதியுத வியையும் சத்தியசாயி ஆச்சிரமம் வழங்கியது.

> சோம்பேறித்தனத்தை எந்த வழியிலும் துரத்தியாக வேண்டும். சிறு சுறுப்பு மல்லாகுந்து எதிர்ப்பது என்று பொருள் எல்லாத் நினைவுகளையும் எதிர்த்துப் போரிடும், எண்ணத்தில் ஏற்படும் தீமைகள் செயலில் ஏற்படும் தீமைகள் முதலிய எல்லாத்தீமைக ளோடும் போரிட்டுக் கொண்டே இரு இப்படி எதிர்ப்பதில் நீ வெற்றிபெற்ற பிறகுதான் அமைதி உன்னைத்தேடி வரும்.

★ எப்போதும் மனதில் இறைவனின் நினைவு இருப்பது அவசியம் ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சண்முகன் சரவணத்தின் பாங்கரில் வந்ததாலே சரவணபவன் என்றானான்

சரவண தடாகம் பசுமையானது. நீர் நிறையப்பெற்றது. நீல மலர்கள் நிறைந்துள்ளன. கூட்டமாகத் தாமரை மலர்கள் குவிந்துவிடுகின்றன. மலர்களைச் சுற்றிச் செந்நிற வண்டுகள் ஒலிக்கின்றன. குமரன் தாமரை மலர் தன்னில் குடியிருக்கின்றார். அது ஏனைய தாமரை மலர்கள் தலையேற்றி வேண்டுதல் செய்வது போலாகும்.

"தேவ முதல்வரே! என் தாமரை மலரின் அகஇதழ்கள் சிறியனையும் இருக்கையாகக் கொண்டருள்க.

முருகன் அழகன் பவளம் போன்று ஒளிமயமானவர். அழகனைச் சூழ்ந்து மணங்கமழ் தாமரைகள் மலர்ந்துள்ளன. அக்காட்சி நுண்ணிய இடையை உடைய நங்கையர் பல்லோர் நீரில் நிற்பது போலாகும். அவர்கள் ஆதவனிடத்தில் பார்வையை நிறுத்திக் குமரக்கடவுளைச் சேரத் தவஞ் செய்வதை ஒக்கும்.

சரவணத்தில் சங்குகள் தெரிவன. அவை பேரொலி செய்வன. பற்பல தாமரை மலர்கள் நறிய தேனைத் தாயில் நிற்பன. அக்கற்பனை கருத்துக்கு விருந்து விளைக்கின்றது. சரவணம் தன்னிடம் வந்த சண்முகனுக்கு வெண்மையும் சங்கும் விடுத்துளது. வெண்மையைச் சங்கிலே ஊற்றி உண்பதற்கு.

சரவணப் பொய்கையில் முத்துக்கள் முகிழ்க்கின்றன. தாமரை இதழ்கள் தளிர்க்கின்றன. பூந்தாதுத் துகள் பொலிகின்றது. குளிர்ந்த தேன் குமிழிடுகின்றது. அது சரவணம் இலையாகிய கரங்களால் குமரனுடைய சிற்றடிகளில் ஈகின்றது. சரவணம் சாந்தமோடு சண்முகர்க்கு அர்ச்சனை ஆற்றுவது போலாகும்.

தாமரை இதழ்கள் படுதலுற்று பசிய இலைகளில் வீழ்கின்றன. நீர்த் தரங்கத்தால் இலைகள் அசைகின்றன. அது சரவணம் பசுந்தட்டில் தீபம் ஏற்றிக் குமரனைச் சுற்றுதல் போலாகும்.

★ தற்பெருமை இன்றித் தமது பலத்தை நம்ப வேண்டும் ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமகள் மகனுக்கு மாணிக்கம் போன்ற மலர்கள் காணாந்தி மேலே பச்சிலைகள் குடைகள். அரும்புகள் தீபம். திரைகள் சாமரை பறவை ஒலி வாத்தியம். இவ்வாறு சரவணம் சரவணபவனுக்கு முறைப்பட ஒழுங்கியது

தடாகத்தில் அலைகள் எழுகின்றன. அவை துகில்விரிப்புப் போலக் கரையில் அமைகின்றன. சரவணம் தோற்றுவண்ணம் தேவர்கள் மென் துகில் விரித்தார்கள். தென்றல் காற்றிற்குப் பக்கங்கள் அசைவது ஒக்கும்.

கோடிக்கணக்கான ஆண் அன்னங்கள் ஒலி எழுப்புகின்றன. அது தனித்துவமாகக் குமரனிடத்தில் குறை இரப்பது போலாகும்.

“படைப்புத் தொழில் இயற்றும் நாளில் நான் உணர்ந்திடுவேன். ஏல் மேல் எழுந்தருள வேண்டும்.

இவ்வாறு இரப்புக்கள் எழுச்சி பெற்றன. சிறந்த சரவணத்தில் இதழ் நெருங்கிய தாமரைப்போது ஒன்றில் குமரன் வீற்றிருந்தருளினார். சராசரம் காக்கும் கருணை அவர் மனத்தில் கசிந்தது.

சிவபிரான் பூதங்களுக்கு அதீதமானவர். மனத்தினால் அளக்க ஒண்ணாதவர். வாக்கினுக்கு வரையறுக்கப்படாதவர். பரிபூரணர். அங்கு இங்கு என்னாதவர். எங்கும் நிறைந்தவர். நிர்மல மூர்த்தி. விமலர். அப்பராபரப் பொருளே ஆறுமுகத் திருவுருவம் கொண்டருளினர்.

சரவணத்தில் மணங்கமழ் தாமரை மலர்வனை, தாமரை மலரில் கருணையோடு வீற்றிருந்தருளினார்.

மரங்கள் சரவணத்தின் பக்கங்கள் எங்கும் செறிந்துள்ளன. அம் மரங்களே தூண்களாகக் கற்பனை. பரந்த வானில் தழைகள் நிறைந்த கிளைகள் பந்தர், பந்தரின் அழகை மேம்படுத்துவன காய்கள் பழங்கள் பூங்கொத்துக்கள் அவை எங்கும் நிரந்து தூங்குகின்றன பந்தர் அழகிய இனிய குளிர்ந்த நிழலைச் செய்கது. பந்தரின் நடுவணாகக் குமரப்பிரான் வீற்றிருந்தருளினார்.

தலைமுடியினால் பாரத்தைத் தாங்க ஆற்றாது அசைகின்றன அரவுகள். அவை பழைய கால்கள். பூமி பலகை. கரையில் நிற்கும் மரங்கள் ஆகாயத்தில் தூங்கும் கயிறு. தாமரை மலர்கள் சயனம். சரவணப் பொய்கை மஞ்சம். குமரன் மஞ்சத்தில் குதூகலித்து இருந்தார். குளிர்ந்த இளந்தென்றல் காற்று மெல்லென அசைந்தது.

மாநாகங்கள் எட்டு ஆதிசேடன் தாங்கும் சிங்கங்கள். குளிர்நீர் கொண்ட சரவணம் தவிசு. தாரகைகள் கிரகங்கள் மேல் விதானம். ஆங்கு உமைமகன் வீற்றிருந்தார்.

சத்தியம் தான் கடவுள் ஒளிதான் அவரது நிழல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூமியின் நடுவாக விளங்குவது சரவணப் கடலின் கீழ்த்திசையில் இளஞ்சூரியன் உதித்தான். வருணதேவன் கவிகையோடு காட்டினான். தாமரை மலரில் குமரன் வீற்றிருந்தார். அக்காட்சி திரிவிக்கிரம வடிவம் கொண்டவர் திருமால். அவருடைய இதயத்தில் குளிர்ச்சியோடும் சுடர் விடும் ஞான விளக்கு. அம்மலரின் உச்சியில் வீற்றிருந்தருளும் சிவபிரான் போன்றது.

இன்னும் சிறந்த நல்ல பிரம அண்டம் விராட்புருடனது இருதயம் இருதயத் தாமரை மலர் சிதம்பரம். சிதம்பர தலத்தில் பிரதானமாகிய சிவபிரான் வீற்றிருத்தல் போலும்.

நீர்த்துளிகள் பச்சிலைகளிற் பரந்து தோன்றுகின்றன. அவைகள் நட்சத்திர மண்டலம். அலைகளும் பாசிகள் மேகம், தாமரைகள் சிறந்த சூரியர்கள். நடுவணான தாமரைமலர் சிவசூரியன். அத்தாமரை மலரில் சிவகுமாரர், சிவபிரான் போன்று வீற்றிருந்தருளினார்.

நாராயணன் நான்முகன் அருகிருந்தார்கள். இந்திரன் முதலிய தேவர்கள் உடன் உறைந்தார்கள். மரங்கள் சூழ்ந்துள்ளன. விலங்கும் பறவையும் மிக்கிருந்தன. குமாரக்கடவுள் நடுவணாக வீற்றிருக்கின்றார். அத்தன்மை படைப்புத் தொடங்கு நாளில் சிவபிரான் வீற்றிருத்தல் போலாகும்.

குமரன் பிரமதேவரைச் சிறை செய்தார். தாமே அறிவினையுடைய ஆன்மாக்களைப் படைக்கத் தொடங்கினார். அந்த நல்ல நான்முகனாகத் தாமரை மலராசன இருக்கை கொண்டார். அது போல நீரார்ந்த தடாகத்தில் மலர்மேலாக நிர்மல மூர்த்தி நிமிர்ந்து இருந்தருளினார்.

அழகிய தாமரை மலர்கள் கொண்ட சரவண தடாகத்தில் தோன்றுதலால் சண்முகப் பெருமான் சரவணபவன் என்னும் பெயர் பெற்றார்.

கந்தபுராணத்தில் கச்சியப்பர் அதைத் தெளிவாகப் பாடிக்காட்டுவார், அது இதோ.

காமர்பூஞ் சரவ ணத்தின் பாங்கரில் வருத லாலே சரவண
பவன் என் நாமம்;
சரவணபவ ஆறு எழுத்து மந்திரம். அதுவே சடாட்சர
மந்திரமும் ஆகும்.


சிவ. சண்முகவடிவேல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதியான்

எமது இனம் நீண்டகாலமாக அனுபவித்துக் கொண்டு வருகின்ற சொல்லொணாத் துன்பங்கள் பற்றியும், எமக்கு ஏற்பட்டுக் கொண்டிருக்கின்ற உயிர் அழிவு, பொருள் அழிவுகள் பற்றியும் சில தசாப்தங்களுக்கு முன்பே இந்த மண்ணில் வாழ்ந்த அருளாளர்களால் உணரப்பட்டு இவைபற்றிய முன் எதிர்வும் அப்பொழுதே கூறப்பட்டும் உள்ளன. யோகர் சுவாமிகள் தமது ஞானதிருஷ்டியினால் இவற்றை உணர்ந்து அப்பொழுதே தமக்கு நெருக்கமானவர்களுக்கு வெளிப்படுத்தியதுடன் எமது பூமி உயிர்களும், உடமைகளும், பசுமைகளும் அழிவடைந்து சுடுகாடுபோல காட்சியளிக்கும் என்றும் குறிப்பிட்டுள்ளார். இது பற்றி அப்பொழுது யாரும் அக்கறை கொள்ளாவிட்டாலும் தற்பொழுது ஆத்மீக நம்பிக்கையுள்ள அன்பர்கள் இக்கருத்துக்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து இது பற்றி எல்லாம் ஆழமாகச் சிந்திக்கத் தொடங்கியுள்ளனர். அத்துடன் இத்தகைய அழிவுகளுக்கான காரண காரியங்கள் பற்றியும் சிந்திக்கத் தொடங்கியுள்ளனர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேநேரம் இத்தகைய அன்பர்கள் அழிவுகள் மத்தியில் இறைவனுடைய அருட்கடாட்சத்தைப் பெற்றவர்களுடைய அபயக்குரல்கள் கலியுகக்கந்தனும், ஆபத்பாந்தவனுமாகிய முருகப்பெருமானுடைய காதுகளுக்கும் கேட்கத்தான் செய்கின்றது. அம் கிளாலிக்கடல் மூலம் போக்குவரத்து நடைபெற்ற இறுதிக்காலத்தில் பயணம் செய்த படகு ஒன்று மூழ்கி உடன் சென்றவர்கள் உயிரிழக்க நேரிட்ட நிலையிலும் சிலர் எல்லாவற்றையும் மறந்த நிலையில் ஆபத்பாந்தவனாகிய கலியுகக்கந்தனை முருகா! முருகா! என்று கதறியழைத்தபடியே மயக்கமுற்றார்கள் என்றும் பின்பு அதிசயிக்கத் தக்கவகையில் அவர்கள் உயிருடன் மீட்கப்பட்டனர் என்றும் பத்திரிகைகளில் செய்திகள் வந்ததும் நாம் அறிந்ததே.

இத்தகைய சந்நிதியானின் அருட்கடாட்சத்தைப் பெற்ற சுவாமிகள் ஒருவரையும் மற்றும் இந்தியாவுக்கு அகதிகளாகச் சென்று கொண்டிருந்தவர்களையும் ஏற்றிக்கொண்டு சென்ற படகு தொடர்பான ஒரு அதிசயத்தைப் பின்வரும் நிகழ்வு எமக்கு எடுத்துக்காட்டுகின்றது.

இவகத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட மேற்படி சுவாமிகள் முருகப்பெருமான் மீதும் அம்மன் மீதும் அளவில்லாத பக்தி உள்ளவர் இளமையிலேயே சந்நிதியானின் அருளைப் பெற்றுக் கொண்டவர் தற்பொழுது இவர் சந்நிதியின் அருள் வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறார். சுவாமிகள் இந்தியாவுக்கு தலயாத்திரை மேற்கொள்ளும் நோக்கத்துடன் 1985ம் ஆண்டு தலைமன்னாருக்குச் சென்று அங்கே சில நாட்கள் தங்கியிருந்தார். அந்தக்கால கட்டத்தில் இலங்கையில் இனப் பிரச்சனை உச்சக்கட்டத்தை அடைந்திருந்தமையால் இலங்கையின் பல பகுதிகளிலிருந்தும் தமிழ்நாட்டிற்கு கடல் மூலம் அகதிகளாகச் செல்வோர் எண்ணிக்கை அதிகமாகக் காணப்பட்டது. அதிலும் தலைமன்னாரிலிருந்து இராமேஸ்வரத்திற்கு அகதிகளாகச் செல்லும் பாதையையே அப்பொழுது மக்கள் அதிகம் பயன்படுத்தினர். அதனால் கடற்படையினருடைய தாக்குதல்களும் அக்காலத்தில் தலைமன்னார் இராமேஸ்வரக் கடல் பாதையில் அதிகம் இடம்பெற்றது.

இவ்வாறு அதிகமானவர்கள் அப்பாதையைப் பயன்படுத்தியமையாலும் ஆபத்துகள் நிறைந்ததாலும் பிரயாணம் செய்யச் செல்பவர்கள் சில நாட்கள் தலைமன்னார் பகுதியில் தங்கியிருந்தே தமது பயணத்தைத் தொடரக் கூடியதாக இருந்தது. இக்காலத்தில் தலயாத்திரைக்காக மேற்படி பாதையூடாக இந்தியாவுக்குச் செல்ல விரும்பிய சுவாமிகள் 1985ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடுப்பகுதியில் மன்னாரில் பேசாலையில் தங்கியிருந்த பொழுது அடிக்கடி கடலில் கடற்படையினருடைய தாக்குதல்களுக்கு இலக்காகி பல அனர்த்தங்கள் நடைபெற்றுக்கொண்டிருந்தன. இதனால் தலயாத்திரையை நோக்கமாகக் கொண்டு அங்கே தங்கியிருந்த சுவாமிகளின் மனதிலும் குழப்பங்கள் ஏற்பட்டன. ஆனாலும்

அறியாமையிலிருந்து வருவது அச்சம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலயாத்திரைக்காக புறப்பட்டு வந்து பயணத்தை எவ்வாறு இடைநிறுத்தி பாதிவழியில் திரும்புவது என்று சிந்தித்த சுவாமிகள் எப்படியும் பயணத்தைத் தொடர வேண்டும் என்ற முடிவுடன் நித்திரைக்குச் சென்றார்கள். அன்று இரவு கனவிலே சுவாமிகள் ஒரு இரட்டை மாட்டு வண்டியில் பிரயாணம் செய்வது போலக் கனவு கண்டார்கள். ஆனால் பிரயாணத்தின் நடுவிலே மாட்டுவண்டியின் நுகத்திலிருந்து இரண்டு மாடுகளும் கழன்று வண்டியிலிருந்து விலகி வண்டில் ஆபத்தான விபத்தை எதிர் நோக்கிக் கொண்டிருக்கக்கனவு கண்டார்கள். ஆனாலும் அந்நேரத்தில் சுவாமிகளின் பெரியம்மா முறையிலுள்ள சிவகாமிப்பிள்ளை அவர்கள் வந்து மாடுகள் வண்டியிலிருந்து பிரிந்து செல்லாவாறு மாடுகள் இரண்டையும் நுகத்திலிணைத்து ஏற்பட இருந்த பெரும் ஆபத்திலிருந்து காப்பாற்றி பிரயாணத்தைத் தொடர வசதிசெய்து வைத்தார்கள்.

இந்தக் கனவைத் தொடர்ந்து, சுவாமிகள் அடுத்த நாள் தனது பயணத்தை மேற்கொள்ளக் கூடிய சந்தர்ப்பம் கிடைத்தது. வள்ளத்தில் இராமேஸ்வரத்தை நோக்கிப் பிரயாணம் தொடங்குகின்றது. வள்ளத்தில் ஏறத்தாழ நாற்பது பேர் அளவில் காணப்படுகின்றனர். அதிகாலை 5.30 மணியளவில் இராமேஸ்வரத்தை நோக்கிய கடற்பயணம் தொடங்கியது. நேரம் 7.00 மணியை அண்மித்துக் கொண்டிருக்கிறது. சுவாமிகள் வள்ளத்தின் பிற்பகுதியிலே முதல் நாள் கண்ட கனவைப்பற்றி சிந்தித்தவாறு அமைதியாக அங்கே சாதாரண பயணிகளில் ஒருவர் போல தானும் அமர்ந்திருந்தார்கள். அப்பொழுது தூரத்திலே ஒரு படகு வருவது போன்ற காட்சி வள்ளத்தில் உள்ளவர்களுக்கு தென்படுகிறது. சிறிது நேரத்தில் அது மெல்ல மெல்ல வள்ளத்தை அண்மித்து வருவதையும் அதன் வேகம் அதிகமாக இருப்பதையும் அவதானித்தனர். இப்பொழுது வள்ளத்தில் உள்ளவர்களுக்கு மனதில் சிறிது சிறிதாக பய உணர்வு ஏற்படத் தொடங்குகின்றது. இந்த நிலையில் அவர்கள் கண்ட படகு ஒரு சாதாரண படகு அல்ல அது கடற்படையினருடைய படகு தான் என்பதையும் அதனுடைய வேகத்திலிருந்து தெளிவாக எல்லோரும் உணருகின்றனர். நிலைமையைப் புரிந்து கொண்ட படகோட்டிகள் பயணிகள் பயணம் செய்த படகின் வேகத்தையும் அதிகரித்தனர். இன்னும் சில மைல் தூரம் சென்றால் கச்சதீவுக்குத் தெரிந்து கொள்வதற்கும் இந்தியாக் கரையை அடைய முடியுமானகையால் அதற்கிடையில் எதுவும் நடக்கக்கூடாதென்ற தவிப்பு எல்லோர் மனதிலும் ஏற்பட்டது. ஆனாலும் அதற்கு மாறாக வேகமாக வந்து கொண்டிருந்த கடற்படைப் படகிலிருந்து குண்டுகள் இவர்களுடைய படகை நோக்கி பாயத்தொடங்குகின்றன. எல்லோரும் பயத்துடனும், பதட்டத்துடனும் சத்தமிடத் தொடங்கினார்கள். இவ்வாறான குழப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்களினால் ஏதோ அசம்பாவிதம் நடைபெறுகின்றது என்பதை உணர்ந்த சுவாமிகள் தேற்றிக் கொண்டு எவரையும் மீண்டும் எடைபோட்டவராக அமைதியாக முருகப் பெருமானைத் தியானித்த வண்ணமே இருந்தார்கள். ஏறத்தாழ அரை மணித்தியாலம் இடம் பெற்ற இந்த துப்பாக்கிச் சூட்டிற்கிடையே தத்தளித்த வள்ளம் இறுதியில் இந்தியாக் கரையை வந்தடைந்தது. என்ன ஆச்சரியம்! கடற்படையினரிடமிருந்து ஏவப்பட்ட ஒரு சூடு கூட பயணிகள் வள்ளத்திற்குள் வந்து விழவில்லை. எல்லாச் சூடுகளும் வள்ளத்திற்கு அண்மையிலும், பக்கங்களிலுமே வந்து விழுந்துள்ளன. பயணிகள் அனைவரும் நிம்மதிப் பெருமூச்சுடனும் இறைவனுக்கு நன்றி செலுத்திக் கொண்டும் படகிலிருந்து இந்தியாக் கரையில் இறங்கத் தொடங்கினர்.

கனவிலே நடக்கப்போகும் நிகழ்ச்சியைக் காண்பித்த சந்நிதி முருகப்பெருமானின் கருணையை நினைந்து சுவாமிகள் ஆனந்தக்கண்ணீர் சொரிய இறைவனைப் பிரார்த்தித்த வண்ணம் வள்ளத்திலிருந்து இறங்கி தமிழ் நாட்டில் தான் செல்ல வேண்டிய இடத்தைச் சென்றடைந்தார்கள். அத்துடன் திருப்தியான முறையில் இந்திய தல யாத்திரையை பூரணமாக நிறைவேற்றி பக்குவமும் முதிர்ச்சியும் நிறைந்த சுவாமிகளாக 1988 ஆம் ஆண்டு தாய் நாடு திரும்பினார்கள்.

"நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லோர்க்கும் பெய்யும் மழை" என்பது போல இறைவனின் அருட்கடாட்சத்தைப் பெற்ற சுவாமிகள் பிரயாணம் செய்ததினால் அவருக்கு ஏற்பட்ட இந்த இறைக் கருணை, அவருடன் பிரயாணம் செய்த அனைவருக்கும் கிடைக்கின்ற வாய்ப்பு ஏற்பட்டு, அனைவரும் காப்பாற்றப்பட இறைவன் அருள் மழை பொழிந்துள்ளான் என்பதை நாம் உணருகின்றோம் அல்லவா

ஓம் முருகா !

ந. அரியரத்தினம்
(அதிபர் தொண்டைமானாறு)

குறிப்பு: சந்நிதி முருகப் பெருமானுடைய இவ்விதமான அற்புத நிகழ்வுகள் தொடர்ச்சியாக ஒவ்வொரு மலரிலும் வெளிவரவுள்ளன. இவ்வாறான அற்புத நிகழ்வுகளை அனுபவித்த அன்பர்கள் தகுந்த ஆதாரத்துடன் விளக்கமாகக் குறிப்பிட்ட மலர்க்குழுவிற்கு அனுப்பினால் அவற்றையும் இத்தொடரில் இடம் பெறச் செய்யலாம்.

★ சுயகட்டுப்பாட்டை விடச் சிறந்த சொத்து வேறொன்றில்லை. ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைகாசிப் பெருவிழா

1993ஆம் ஆண்டிலிருந்து வைகாசி மாதத்தில் வைகாசிப் பெருவிழா என்ற பெயருடன் ஒரு விழாவை எமது பேரவை வருடா வருடம் நடாத்தி வருகின்றது. பேரவையால் தெரிவு செய்யப்படுகின்ற ஒருவருக்கு இந்த விழாவில் வைத்து விருதினை வழங்கி அவரைக் கௌரவிப்பதையும் நமது வழக்கமாகக் கொண்டுள்ளோம்.

விருதுகள் வழங்கப்படும் பொழுது விருதின் தொடக்கம் ஞானபண்டித ........ என்று தொடங்கி வழங்கப்படும் துறையைப்பொறுத்து அத்துறையைச் சுட்டிக் காட்டக் கூடியதாக அது முடிவடையும் மேலும் இந்த விருதுகள் வழங்கப்படும் பொழுது அது இரண்டு அம்சங்களை உள்ளடக்கியதாக அமைந்திருக்கும்.

சான்றிதழ்:- இது விருது வழங்கப்படுபவரின் சேவையை கௌரவித்து வாழ்த்தி வழங்கப்படுகின்ற ஒரு அழகான சான்றிதழாக இருக்கும். அத்துடன் இந்த சான்றிதழில் பேரவையின் சின்னம் இடம் பெற்றிருக்கும்.

கேடயம்:- எமது பேரவையால் தனித்துவமாக வடிவமைக்கப்பட்ட நுணுக்கமான வேலைப்பாடுகள் நிறைந்த விலைமதிப்புள்ள ஒரு கேடயமாக இது அமைந்திருக்கும்.

## விருது வழங்கல் 1993

1993 ஆம் ஆண்டு விருதுகள் யாழ்ப்பல்கலைக் முன்னாள் துணை வேந்தரும் எமது பேரவையின் தலைமைப் பீடத்தை அலங்கரித்த வருமான பேராசிரியர் அ. துரைராசா அவர்களால் வழங்கப்பட்டது.

| விருதினைப்பெற்றோர் | வழங்கப்பட்ட விருதுகள் |
|---|---|
| திரு. க. முத்துவேல் | ஞானபண்டித இயல் அரசு |
| திரு. க. தணிகாசலம் | ஞானபண்டித ஆய்வரசு |
| திரு. க. குமாரசாமி | ஞானபண்டித இசையரசு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விருது வழங்கல் 1994

1994 ஆம் ஆண்டு விருது எமது பேரவையின் முன்னாள் போஷகரும் ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய பிரதம பூசகருமான திரு வி. இராசேந்திரம் ஐயர் அவர்களால் வழங்கப்பட்டது.

| பெற்றுக்கொண்டவர் | விருது |
|---|---|
| பேராசிரியர் அ. சண்முகதாஸ் | ஞானபண்டிதத் தமிழ்க்குரிசில் |

## விருது வழங்கல் 1998

1998 ஆம் ஆண்டிற்குரிய விருதினை எமது போஷகரும் வல்லை முத்துமாரி அம்மன் தேவஸ்தான பிரதம குருவுமாகிய சோ. தண்டபாணிக தேசிகர் அவர்களால் வழங்கப்பட்டது.

| பெற்றுக்கொண்டவர் | விருது |
|---|---|
| சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி | ஞானபண்டித கலாவித்தகி |

1998 ஆம் ஆண்டு எமது பேரவையால் விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையார் அவர்கள் தமிழ் கூறும் நல்லுலகம் முழுவதும் அறிந்த ஒரு பெருமாட்டியார். உலகமக்களால் போற்றப்படுகின்ற அன்னை திரேசாவுக்கு நிகராக ஒப்பிடக் கூடிய சேவைகளை எமது மண்ணில் இருந்து ஆற்றிவருகின்ற ஒரு பெருந்தகை. அத்தகைய சமூகசேவை செய்கின்ற ஒரு சமயப் பெரியாருக்கு விருது வழங்குவதற்கு எமக்கு கிடைத்த சந்தர்ப்பத்தை எமக்கு கிடைத்த ஒரு பேறாகவே நாம் கருதுகின்றோம். மேலும் எமது பேரவை விருது வழங்கிய நிகழ்வைத் தொடர்ந்து சில மாதங்களின் பின் யாழ் பல்கலைக்கழகத்தால் அம்மையாருக்கு கலாநிதிப் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்ட சம்பவத்தையும் இந்த சந்தர்ப்பத்தில் நினைவு கூறுவது பொருத்தமானது.

1999 ஆம் ஆண்டிற்குரிய வைகாசிவிழா 29-05-99 சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

திரு ந. அரியரத்தினம்
செயலாளர்
ச. ஆ. சை. க. ப. பேரவை

★ அரச பதவி கிடைப்பதானாலும் மனசாட்சியை விற்காதே. ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பலாலி ஆசிரிய பயிற்சிக்கலாசாலை

## சைவமாணவ மன்றத்தின்

# பங்குனி உத்தரவிழா

விழாக்கள் பல காணும் சந்நிதியான் ஆச்சிரமம் 31 - 03 - 1999 புதன்கிழமை பலாலி ஆசிரிய கலாசாலைச் சைவமாணவ மன்றமும் சந்நிதியான் ஆச்சிரம சைவ, கலை, பண்பாட்டுப் பேரவையினருடன் இணைந்து நடாத்தும் கோலாகலமான விழாவினை இவ்வாண்டும் காணப்பெற்றது அன்று. சந்நிதியான் ஆச்சிரமம் - திருமணவிழாக் கோலம் பூண்டிருந்தது

விழா நிகழ்வுகள் மங்கள விளக்கேற்றல், கடவுள் வணக்கத்துடன் ஆரம்பமாகின. கலாசாலைச் சைவ மாணவமன்றச் செயலாளர் திரு இ. வாசுதேவன் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்கள். மார்கழித் திருவாதிரை என்றதும் எமது நினைவுக்கு வருவது சிதம்பரம். பங்குனி உத்தரம் என்றதும் எம் நினைவுக்கு வருவது திருவாரூர். இவ் உத்தரத் திருநாளிலே தான் எம் பெருமான் இமயமலையரசன் - பர்வதராஜனின் மகளாக வந்த பார்வதிதேவியைத் திருமணம் செய்து கொண்டாராதலினால் இத்தினத்தில் பக்திமயமாக நோற்பவர்கள் திருமணப் பேறு, சற்புத்திர பாக்கியப் பேறு ஆகிய அனைத்தும் பெறுபவராவர் என்ற கருப்பொருளை உடையதாக அவரது உரை அமைந்தது

### தலைமை உரை சிவத்தமிழ் வித்தகர்

விழாவுக்குத் தலைமை வகித்தவர் - சைவ, மாணவ மன்ற உப காப்பாளர், சிவத்தமிழ் வித்தகர் சிவ மகாலிங்கம் அவர்கள் நினைவினாலும் சொல்லினாலும் செயலினாலும் நாம் புண்ணியத்தைப் பெருக்கிக் கொள்ளவேண்டும். அவ்வகையில் இத்தகைய விழா எடுப்பதும் அதனைக் காண்பதும் பரம புண்ணியமாகும் எனக் கூறினார்கள். இறைவன் திருமணம் புணர்ந்து கொள்வது நாம் காணும் இன்ப நுகர்ச்சியின் பொருட்டல்லாமல் இறைவன் ஆன்மாக்களின் மீது கொள்ளும் பேரருள் திறத்தினை விளக்குதற் பொருட்டேயாகும் என்பதனை விளக்கினார்கள். இத்தினத்திலேதான் - சத்தியம் தவறியதால் தன் கட்பார்வையை இழந்த சுந்தரருக்குத் திருவாரூர்த் தியாகேசப் பெருமான் வலக்கண் பார்வையை அருளினார். சுந்தரர் பொருட்டாக ஒரு முறைக்கிருமுறை பரவையாரிடம் தூது சென்றார் என்ற அம்சங்களையும் விளக்கினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்புரை - அதிபர் சோ. பத்மநாதன்

சிறப்புரைகள் வரிசையில் அலங்காரம் என்னும் பொருளில் உரை நிகழ்த்திய - பலாலி ஆசிரிய கலாசாலை அதிபர். திரு. சோ. பத்மநாதன் அவர்கள் முருகப் பெருமானின் அழகுகளைச் சுதாரித்துக் கொண்டால், எமது ஆன்மீகப் பொழுதும் மயில்மீது வேலுடன் காட்சிதரும் முருகனின் அழகு தோன்றும் பெறும் என்ற கருப்பொருளை விளக்கினார்கள். இது - தண்டகாரணியத்தின் - பர்ணசாலையினிடமாகச் சீதையின் பொழுதில் ஏற்பட்டுக் கண்டிற பொருளிற் செல்லாது நின்ற சூர்ப்பநகை ஸ்ரீராமனைக் கண்ட போது அவளுக்கிய அனைத்து அழகுமாகக் கண்டது போலவும், இலக்குமணனால் மானபங்கப்பட்ட சூர்ப்பனகை தன் தமையனாகிய இராவணனிடத்தே சீதையின் அழகுகளை எல்லாம் கூறி விட்டுத் தான் மானபங்கப்படுத்தப்பட்டமையையும் கூறிய போது, சீதையின் பொழுதில் மயங்கிய இராவணனின் நினைவு முழுவதும் சீதையின் அழகு தோன்றியதே ஒழிய இராமன் மீது சீற்றம் எழாது நின்றது போன்றதாகும் எனக் காட்டினார்கள்.

திருமதி கோதை நடராஜா

கலியுகக்கடவுள் கந்தன் என்ற தலைப்பில் அடுத்து உரை நிகழ்த்திய - பலாலி ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர். திருமதி. கோதை நடராசா அவர்கள் கலியுகம் பக்தி யோகத்திற் குரியதென்றும் அவ்வகையில் நக்கீரர், ஔவையார் அருணகிரிநாதர் ஆகியோர் முருக பக்தர்களாய் அருள் பெற்றமையை எடுத்து விளக்கினார்கள். பக்தி மார்க்கப்பூசை நிகழும் சந்நிதியுடன் தொடர்புபடுத்தி, அவரது உரை நிகழ்த்தப்பெற்றது.

A. V மகாதேவன் அவர்கள்

'மானுடம் ஏதும் அறிந்து' என்னும் தலைப்பில் உரை நிகழ்த்திய திரு. A.V மகாதேவன் அவர்கள் முத்தியின்பம் பெறுதற்கு ஒரேயொரு வழி மானுடப் பிறப்பே என்ற கருத்தை விளக்கினார்கள். இருவினையொப்பு, மலபரிபாகம், சத்திநிபாதம் உண்டாகப் பெறுபவர் மானுடரே தாம் என்பதைத் தெளிவுபடுத்தினார்கள்.

குறிப்புரை - காரை சுந்தரம்பிள்ளை அவர்கள்

அடுத்துக் குறிப்புரை வழங்கிய பலாலி ஆசிரிய கலாசாலையில் பகுதி நேர விரிவுரையாளர். கவிஞர், காரை. சுந்தரம்பிள்ளை அவர்கள் 'பிரியமும்' காடுமே, சூரும் விம்பி அழகனாகிய குழந்தை இக்குவலயம் குறிஞ்சிக் கிழவன் என்று ஓதுகின்றதே என நயம்பட எடுத்துக் காட்டினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதாப்பிரசங்கம் -

'குருவாய் வருவாய்' என்ற பொருளில் கதாப்பிரசங்கம் நிகழ்த்திய திரு. ச. லவிசன் அவர்கள், தந்தைக்குக் குருவான ஸ்ரீ முருகன், தந்தையாகிய சிவனுடன் வாதிட்ட நக்கீரருக்குக் குருவானவர்; வாக்கிற்கு ஒருவரெனப் போற்றப்பட்ட அருணகிரிக்குக் குருவானார், இறையனார் களவியலுக்கு மெய்ம்மையான உரை எது என உருத்திர சன்மனாக இருந்து உணர்த்தினார், செந்தமிழ்த் தெய்வமானார் என்ற கருத்துக்களை அமைத்துக் கதாப்பிரசங்கித்தார்.

பண்ணிசை:

கலாசாலை முதல் வருட மாணவியரால் திருப்புகழ்ப் பண்ணிசை வழங்கப்பெற்றது. தெய்வீக கானாமிர்தமாக ஒலித்த அவர்களின் பண்ணிசை முருகனடியார்களை மெய்மறக்கச் செய்தது.

நன்றியுரை:

சத்தியசாயி ஆச்சிரம சைவ கலை, பண்பாட்டுப் பேரவையின் செயலாளர் திரு. ந. அரியரத்தினம் அவர்கள் நன்றியுரை நிகழ்த்துகையில், இத்தகைய நிகழ்வுகளை நடாத்துவதையிட்டு எமது பேரவை பெருமிதம் கொள்கிறது என்பதையும் மாகேசுர பூஜையினை இடையீடின்றி நடாத்துவதோடு, அறிவுக்கு விருந்தான, கலைப்புலனுக்கு விருந்தான நிகழ்வுகளையும் தொடர்ச்சியாக வழங்குவதோடு ஞான பொக்கிஷமாக 'ஞானச்சுடர்' என்ற ஆத்மீக மாதாந்த சஞ்சிகையை வெளியிட்டு வரும் எமது பேரவையின் பணிகளுக்குப் பலாலி ஆசிரிய கலாசாலைச் சமூகத்தின் பேருதவி மிகவேண்டப்படுவதாகும். எனக் கேட்டுக் கொண்டார்கள்.

கடவுள் வணக்கத்துடன் விழா நிகழ்வுகள் நிறைவு பெற்றன. அடுத்து, மாகேசுர பூஜை வழங்கப்பட்டது.

சொர்க்கத்தைத் தேடி நாம் எங்கும் போக வேண்டியதில்லை. கட்டுப்பாடான வாழ்க்கை, நல்லொழுக்கம், பிறரிடம் நாம் காட்டும் தூய அன்பு, நமக்கு உதவ முடியாத ஜீவன்களிடமும் காட்டும் கருணை இவற்றினால் நம்முடைய மனதிற்குக் கிடைக்கும் நிறைவே சொர்க்கமாகும்.

ஒரு சாது.

வீண் பெருமை எவரையும் வீழ்த்திவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம் மலரில்

மாணவர் பக்கம்

இடம்பெறவில்லை

அடுத்த மாத மலரில்

வழமை போல

இடம்பெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைகாசி மாத வாராந்த நிகழ்வுகள்

**07-05-99** வெள்ளிக்கிழமை முற்பகல் 10-30 மணியளவில்

அறிமுகவுரை: திரு. சி. முருகேசம்பிள்ளை J.P
(இளைப்பாறிய உ. அ. அதிபர்)

சொற்பொழிவு : "மூவர் தமிழ்"

வழங்குபவர் : திரு. சி. சக்திகிரீவன் (கி. சே)
(செயலாளர் இந்து சமயப் பேரவை யாழ்)

---

**14-05-99** வெள்ளிக்கிழமை முற்பகல் 10-30 மணியளவில

அறிமுகவுரை ; செல்வி சரோஜா தம்பு

விடயம் : "இன்னிசை விருந்து"

வழங்குபவர்கள் : செல்வன் அ. கிருஷ்ணானந்தன்
செல்வன் வே. ஞானசம்பந்தன்
செல்வன் மதன்
மிருதங்கம் செல்வன் ரமணன்
(அரங்கக் கலாசாலை மாணவர்கள் நெல்லியடி)

---

**21-05-99** வெள்ளிக்கிழமை முற்பகல் 10-30 மணியளவில்

அறிமுகவுரை : திரு க. சிவக்கொழுந்து J. P
(இளைப்பாறிய தபாலதிபர்)

சொற்பொழிவு : "கண்ணனும் கீதையும்"

வழங்குபவர் : திரு செல்வன் சிவஞானம் பாலமுரளி

---

**28-05-99** வெள்ளிக்கிழமை முற்பகல் 10-30 மணியளவில்

# ஞானச்சுடர் மாத வெளியீடு

# வைகாசி - 1999

வெளியீட்டுரை : திரு சி. சிவபாலசிங்கம் (கி. சே)
(வல்வெட்டித்துறை.)

மதிப்புரை ; திரு ஐ. சண்முகலிங்கம்
(ஆசிரியர் ம. ம. வி நெல்லியடி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாசகர் போட்டி

முதல் பத்து மலரிலும் ( 1999 ஜனவரி - ஒக்டோபர் ) வெளியிடப்படும் விடயங்களை உள்ளடக்கியதாக வாசகர் இடையே போட்டி ஒன்று நடைபெறவுள்ளது. இப்போட்டியில் வெற்றி பெறுவோருக்கு வழமைபோல பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும்.

போட்டி தொடர்பான விபரங்கள் நவம்பர் மாத இதழில் வெளியிடப்பட்டு போட்டி நடாத்தப்பட்டபின் அது பற்றிய முடிவுகள் 2000 ஜனவரி மலரில் வெளியிடப்படும்.

## அன்பான வேண்டுகோள்

மலருக்குப் பொருத்தமான, தரமான சொந்த ஆக்கங்களை இலகு தமிழில் எழுதி எமக்கு அனுப்பி வைக்குமாறு சமயப் பெரியார்களையும், அறிஞர் பெருமக்களையும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

மலர்க் குழு :

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை.

செல்வச்சந்நிதி, தொண்டைமானாறு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org